REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஏப்ரல் 27 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 92 இல. 100 | Saturday 27, April, 2024 | 09பக்கங்கள் | 50/-

## வாழ்நாளில் பார்வையிடக்கூடிய
## உலகின் சிறந்த நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு ஐந்தாவது இடம்




வாழ்நாளில் பார்வையிடக்கூடிய உலகின் சிறந்த நாடுகள் பட்டியலை CEO WORLD எனும் சஞ்சிகை தயாரித்துள்ளதுடன், அதில் இலங்கை 05ஆவது இடத்தை பிடித்துள்ளது. இந் நிலையில் முதலாவது 06

### மத்தள விமான நிலைய முகாமைத்துவம்
## இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களிடம் ஒப்படைக்க அமைச்சரவை அங்கீகாரம்




மத்தள விமான நிலையத்தின் நிர்வாகத்தை இந்தியாவின் M/S Shaurya Aeronautics (Ptv) Ltd மற்றும் ரஷ்யாவின் Airport of Regoins Management Company நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி இந்த விமான நிலையத்தின் நிர்வாகம் முப்பது ஆண்டுகளுக்கு இந்த இரு நாடுகளின் நிறுவனங்களுக்கு மாற்றப்பட உள்ளது. அமைச்சரவையால் நியமிக் கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டு 06

### 2023 இன் பின்னடைவின் பின்
## இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைகிறது




சுதந்திரத்திற்குப் பின்னர் வரலாற்றில் மோசமான பொருளாதார மந்த நிலை எதிர்நோக்கப்பட்ட 2023 ஆண்டைத் தொடர்ந்து, இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வருவதாக இலங்கை மத்திய வங்கி தனது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய வங்கியின் ‘2023 வருடாந்த பொருளாதார விளக்கவுரை ' மற்றும் ' 2023 நிதி அறிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் 'முதலான தலைப்புக்களிலான தனது அறிக்கையிலேயே சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கும் பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் பொறுப்புக் கூறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய 06

### காசா சிறுவர்களுக்கான நிதியம்
## நிதி நன்கொடை காசோலைகள் ஜனாதிபதி ரணிலிடம் கையளிப்பு

காசா மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட காசா சிறுவர்கள் நிதியத்துக்கான (Children of Gaza Fund) நிதி நன்கொடைகள் நேற்று (26) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக் கப்பட்டன. 06



கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் 15,89,000 ரூபா நன்கொடை

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்
# சகல தரப்பும் ஒன்றிணைந்தால் மட்டுமே பிரச்சினைக்கு தீர்வு
## இதுவரை 11 நாட்கள் விவாதம், 150 மில்லியன் ரூபா செலவு
### "நாம் ஒன்றிணைந்து இவ்விடயத்துக்கு தீர்வு காண முன்வரா விட்டால் இன்னும் விவாதங்களை தொடரலாம்"
### சபையில் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்துக்கு தீர்வு காண்பதானால் பேராயர் மற்றும் கத்தோலிக்க ஆயர் பேரவை உள்ளிட்ட அவர்களின் சட்டத்தரணிகள், எதிர்க்கட்சியினர், பொலிஸார் ஆகிய தரப்பினர் ஒன்றிணைந்து விசாரணைகளை மேற்கொண்டு சரியான தகவல்களை பெற்றுக்கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது அவசியமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமானால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதல் விவகாரத்தில் பொலிஸ் தரப்பிலும் குறைபாடுகள் 06

### குற்றச்செயல்கள் மூலம் பெறப்பட்ட
## சொத்துக்களை மீட்க விரைவில் புதிய சட்டம்
### சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை அங்கீகாரம்
### ஜனாதிபதி, நீதி அமைச்சர் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு



குற்றச்செயல்கள் மூலம் பெறப்பட்ட பணத்தை மீட்க அரசாங்கம் சட்டமொன்றை கொண்டு வரவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் (25) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 06

### தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு
## நியாயமான தீர்வை ஜனாதிபதி வழங்குவார் என நம்பிக்கை
### இல்லையேல் பதவிகளை துறக்கவும் தயார்



லோரன்ஸ் செல்வநாயகம்

பெருந்தோட்ட மக்களுக்கு நியாயமான சம்பள உயர்வை மே மாதம் முதலாம் திகதி அரசாங்கம் அறிவிக்கத் தவறினால் தாம் அனைத்து 06

## மாலைதீவு–இலங்கைக்கிடையில் மற்றுமொரு நேரடி விமான சேவை
### Moldavian Air A 330 விமானங்கள் சேவையில்



மாலைதீவின் மாலே சர்வதேச விமான நிலையத்துக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கும் இடையே மற்றுமொரு நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி மாலைதீவுக்கும் இரத்மலானை விமான நிலையத்துக்கும் இடையில் தற்போதுள்ள வாடகை விமான 06

## உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

உள்ளூராட்சிமன்றங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனைக் கூறினார். 06

### எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில்
## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ரியாத் பயணம்



சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் வலுத்திறன் தொடர்பான சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வெளிநாட்டலுவல்கள் 06

## அநுரகுமார திஸாநாயக்க சுவீடன் பயணமானார்



சுவீடனுக்கு தேசிய மக்கள் சக்தித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்கசுவீடனுக்கு பயணமானார். இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் இரவு அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. புறப்பட்டுச் சென்றார். 06

### நீதிபதிகள் தொடர்பில் கிரியெல்லவின் கூற்று
## தெரிவுக்குழு அமைத்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்
### அமைச்சர் ஹறின் சபையில் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நீதிபதிகளின் முடிவுகள் தொடர்பில் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கும் கூற்று சிறப்புரிமை மீறல் என்றும் அது 06

### 180,000 மாணவர்களின் எதிர்பார்ப்பு
## GCE O/L விடைத்தாள் மீள்பரிசீலனை முடிவுகள் 02 வாரங்களில் வெளியீடு
### சபையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



லோரன்ஸ் செல்வநாயகம்

கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மீள் பரிசீலனை முடிவுகள் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் 06

### ஈஸ்டர் தாக்குதலை விசாரிக்க
## அனைத்துக் கட்சிகள் உள்ளடங்கிய பாராளுமன்ற மேற்பார்வை குழு அவசியம்
### சபையில் ரவூப் ஹக்கீம் எம்.பி.



லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்துவதை விடுத்து அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற மேற்பார்வைக் குழு நியமிக்கப்பட்டு 06

### ஸ்ரீல.சு.க. மாவட்ட அமைப்பாளர்களை
## கட்சியில் மீள இணைக்க விசேட குழு நியமனம்

சுதந்திரக் கட்சியிலிருந்து பல்வேறு காரணங்களால் நீக்கப்பட்ட தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களை மீண்டும் கட்சியில் இணைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீல.சு.க.வின் அரசியல் குழுக் கூட்டம் அக்கட்சியின் பதில் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற போதே மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் அமைச்சர் 06

## கல்வியியற் கல்லூரிகளுக்கு 60,000 பேர் விண்ணப்பம்




கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய ஆட்சேர்ப்புக்காக 60,000 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் அடுத்த வாரத்துக்குள் இதற்கான பணி ஆரம்பிக்கப்படுமெனவும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இதேவேளை கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி முடித்த 4,160 பேர் கல்லூரிகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும், அமைச்சர் கூறினார். 06

### சிறுவர், சிறுமியரின் ஆபாச படங்கள்
## இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்பவர்கள் உடனடியாக கைது
### பொலிஸார் விசேட நடவடிக்கை

பதினெட்டு வயதுக்கு குறைந்த ஆண், பெண் பிள்ளைகளின் ஆபாச புகைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகளை இணையத்தளங்கள் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பதிவேற்றும் நபர்களை அடையாளம் காண்பதற்கு பொலிஸார் விசேட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் 03 மாதங்களில் சிறார்களுடன் தொடர்புடைய புகைப்படங்களை 06

# முறிகண்டியில் கோரவிபத்து ஒருவர் பலி 7 பேர் படுகாயம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவ வீரர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளதுடன், 7 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. முறிகண்டி வசந்தநகர் சந்தியின் A9 வீதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி பயணித்த பாரவூர்தியை, அதே திசையில் பயணித்த இராணுவ கப் வாகனம் முன் நோக்கி செல்ல முற்பட்டுள்ளது. இதன்போதே விபத்து இடம்பெற்றுள்ளது. கப் வாகனம் திடீரென இயங்காமல் நின்றுள்ளது.

எதிரே வந்த வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி விடும் எனும் அச்சத்தில் விபத்தை தவிர்க்கும் நோக்குடன் சாரதி பாரவூர்தியை செலுத்த முற்பட்டுள்ளார்.

இதன்போது, கப் வாகனத்தில் பாரவூர்தி மோதியதில் அதில் பயணித்த இரண்டு இராணுவ வீரர்கள் வீதியில் விழுந்துள்ளனர்.

அதில் ஒருவர் மேல் பாரவூர்தி ஏறியதில் இராணுவ வீரர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை சம்பவத்தில் காயமடைந்த 7 பேரில் இருவர் இரணைமடுவில் உள்ள இராணுவ வைத்தியசாலையிலும், மற்ற நால்வரும் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் 34 வயது பெண் பாலியல் துஷ்பிரயோகம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் போதை ஊசி செலுத்தி பெண்ணொருவரை கும்பலொன்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். யாழ்ப்பாண நகரை அண்டிய கிராமத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தாய், தந்தை உயிரிழந்ததையடுத்து, பெண்ணும், அவரது மூத்த சகோதரியும் பருத்தித்துறை பகுதியிலுள்ள ஆதரவற்றோர் பாதுகாப்பு இல்லத்தில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம், பெண்ணின் மூத்த சகோதரி உயிரிழந்த நிலையில், இவரது சகோதரன் இவரை தனது இல்லத்திற்கு அழைத்து சென்றிருந்தார். இதன்போதே இவர் துன்புறுத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பெண்ணின் வாக்குமூலத்தை முறைப்பாடாக பதிவு செய்துள்ள பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## யாழ்.மறை மாவட்ட ஆயரின் குருத்துவ பொன்விழா





யாழ்.மறை மாவட்ட ஆயரின் குருத்துவ பொன்விழாவில் வடக்கு மாகாண ஆளுநரும் கலந்து கொண்டார்.

யாழ்.மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் 50 ஆவது குருத்துவ சேவைக்கான பொன்விழா அண்மையில் நடைபெற்றது.

யாழ். ஆயர் இல்ல வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனைகளின் பின்னர் ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் குருத்துவ சேவைக்கான கௌரவமளிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

## மாரடைப்பு காரணமாக சுவிஸ் தொழிலதிபர் மரணம்

(நாகர்கோவில் விசேட நிருபர்)

சுவிஸ் நாட்டில் வசித்து வந்த வடமராட்சியைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒருவர் மாரடைப்பு காரணமாக நேற்றுமுன்தினம் சுவிசில் உயிரிழந்துள்ளார்.

பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த வடிவேலு வரதன் (வயது 65) என்பவர் சுவிஸ் நாட்டில் சூரிச் மாநிலத்தில் குடும்பத்துடன் வசித்து வருகின்றார்.

அங்கு "வேலா கிறடிற்" எனும் நிறுவனத்தை நடத்தி வரும் அவர் பல சமூகசேவை பணிகளை மேற்கொண்டு வந்துள்ள நிலையில் மாரடைப்பு காரணமாக நேற்றுமுன்தினம் நாட்டில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வடமராட்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தந்தை செல்வநாயகத்தின் 47வது நினைவு தினம்

(பருத்தித்துறை விசேட நிருபர்)





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வநாயகத்தின் 47வது நினைவு தினமும் நினைவுப் பேருரையும் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபியில் இந்நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது. தந்தை செல்வாவின் தூபிக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் "இலங்கை தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புக்களும் சவால்களும்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றினார்.

இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சியின் மூத்த பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## வடமாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(ஓமந்தை விசேட நிருபர்)

வடமாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமானது நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் சங்க தலைவர் வைத்தியர் பி. சக்திக்குமரன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஸ்தாபகர் வைத்தியர் ஏ.சக்திவேல் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக தாய்ச்சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹேவாகம, உபதலைவர் வைத்தியர் சாமர ஆகியோரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

## நீதிபதி இளஞ்செழியன் மீது துப்பாக்கி சூடு வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

(யாழ்.விசேட நிருபர்)

நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான துப்பாக்கி சூடு வழக்கின் பிரதான சான்று பொருளான கைத்துப்பாக்கி அரச பகுப்பாய்வு பிரிவிடமிருந்து மீள பெறப்படாத காரணத்தால் , வழக்குவிசாரணைகள் மே மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ஆம் திகதி நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் , நேற்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே நீதிபதியின் மெய்ப்பாதுகாவலராக அக்காலத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

இதன் போது, உங்கள் கைத்துப்பாக்கியை அடையாளம் காட்ட முடியுமா? என அரச சட்டவாதி சாட்சியிடம் கேட்ட போது, "ஆம்" என பதிலளித்தார்.

ஆனால் அடையாளம் காட்டுவதற்கு துப்பாக்கி நீதிமன்றத்தில் இருந்திருக்கவில்லை. கைத்துப்பாக்கியை அரச பகுப்பாய்வு திணைக்களத்திடம் வழங்கப்பட்டு அது மீள பெறப்படவில்லை என்பது தெரியவந்தது.

அதனையடுத்து, பிரதான சான்றுப் பொருள் இல்லாது , விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என தெரிவித்த நீதிபதி, வழக்கினை எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதி ஒத்திவைத்தார்.

அத்துடன் அரச பகுப்பாய்வு திணைக்களத்திடமிருந்து கைத்துப்பாக்கியை மீள பெற்று, சான்று பொருளாக நீதிமன்றில் அதனை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி கட்டளையிட்டார்.

## அநுராதபுர மாவட்டத்தில் அரிசி வழங்கும் திட்டம்

( திறப்பனை தினகரன் நிருபர்)





அநுராதபுர மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் இலவச அரிசி வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் கீழ் இதுவரை சுமார் 40000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவச அரிசி விநியோகம் இடம் பெற்றுள்ளது. தொடர்ந்தும் தகுதி உள்ள குடும்பங்களுக்கான இலவச அரிசி விநியோகம் இடம் பெற்று வருகின்றது.

அநுராதபுர மாவட்டத்தின் திறப்பனை மற்றும் பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கான இலவச அரிசி விநியோகம் நிறைவடைந்துள்ள நிலையில் ஏனைய பிரதேச செயலக பிரிவில் இத்திட்டம் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

அநுராதபுர மாவட்டத்தில் 153936 பயனாளிகள் இலவச அரிசியை பெற்றுக் கொள்வதற்காக அடையாளம் காணப்பட்டிருந்தனர். இவர்களுக்கு ஏப்ரல், மே மாதங்களுக்காக குடும்பத்துக்கு தலா 10 கிலோ அரிசி வீதம் இலவச அரிசி வழங்கப்பட்டுள்ளது.

## புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி இன்று

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் மோட்டார் குரோஸ் ரேசிங் கிளப், நோன்பு பெருநாள் மற்றும் தமிழ் சிங்கள புது வருடத்தையொட்டி நடாத்த இருக்கின்ற மாபெரும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணியிலிருந்து புத்தளம் இஜ்திமா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற இருக்கின்றது.

சிறுவர் சிறுமிகளுக்கான நெடுவோட்டம், சைக்கிள் ஓட்டம், ஆள் தூக்கி ஓட்டம், வயோதிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கான நெடு ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டம், அரைக்கரத்தை மற்றும் ரேஸ் கரத்தை ஓட்டம், குதிரை ஓட்டம், இலங்கையின் பிரபலமான தேசிய மட்ட வீரர்கள் பங்கேற்கின்ற மோட்டார் குரோஸ் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் இதனை கண்டு களிக்க வருகை தருமாறு அன்போடு அழைப்பு விடுக்கின்றார்கள் ஏற்பாட்டுக் குழுவினர்.

## தட கள விளையாட்டு போட்டி

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டு வீரர்களுக்கான தட கள போட்டி நிகழ்ச்சி இன்று 27 ம் திகதி சனிக்கிழமை காலை 08 மணிக்கு புத்தளம் சாந்த மரியாள் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த போட்டியில் பங்கேற்பதற்காக திறமை உள்ள விளையாட்டு வீரர்களை காலை 8 மணிக்கு முன்பதாக வருகை தருமாறு புத்தளம் விளையாட்டு அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பேருவளையில் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா



தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டி களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த கௌரவிப்பு விழா பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 19.05.2024 ஆம் திகதி காலை 9 மணிக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எம். பாஸி ஸுபைர் மேற்கொண்டு வருகிறார்.

பேருவளைத் தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளான மக்கொன அல்ஹஸனியா மகா வித்தியாலயம், சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா பெண்கள் பாடசாலை, மஹகொட ஐ.எல்.எம். ஸம்ஸுதீன் வித்தியாலயம், தர்காநகர் ஸாஹிராக் கல்லூரி, தர்காநகர் அல் ஹம்றா மகா வித்தியாலயம், தர்காநகர் முஸ்லிம் பெண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றில் கடமை புரிந்து ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். பேருவளை மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அதிபர் எஸ்.ஆர். குமாரை கௌரவிக்கும் நிகழ்வும் இங்கு நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களை 077 0812420 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எம். பாஸி ஸுபைரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி



தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் கொழும்பில் இயங்கிவரும் நம்பிக்கை நற்பணி மன்றம் நடத்தும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு அறுவர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜுன் 21, 22 ஆம் திகதிகளில் பொரளை, பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் இடத்துக்குத் தெரிவாகி வெற்றி பெறும் அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும். இரண்டாம் இடத்துக்கு (Runner up) தெரிவாகும் அணிக்கு 50,000 ரூபா பணப்பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும்.

அது தவிர ஆட்ட நாயகனுக்கு 7000 ரூபா பணப்பரிசும் சிறந்த தொடர் நாயகனுக்கு 5000 ரூபா பணப்பரிசும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் ஆகியோருக்கு 3000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படும். இதில் 32 அணிகளுக்கு மட்டும் தான் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 0760095799 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஜி. சேகரிடம் அல்லது 0773867585 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம். பரமுடம் அல்லது 0771784923 என்ற தொலைபேசி இலக்கத்தில் கனகராஜிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி ஆளுமைகளை ஆவணப்படுத்தும் முயற்சிக்கான தகவல் கோருதல்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இளைஞர்களுக்கான கணனி மற்றும் தையல் வகுப்புகளை நடாத்தி நூற்றுக்கணக்கான மாணவர்களை தொழில் உலகுக்கு தயார்படுத்தி சமூக மாற்றத்திற்காக இயங்கிக் கொண்டிருக்கும் லிட்டில் எய்ட் திறன் விருத்திமையமானது யார்..? எவர் ..? என்ற தொனிப் பொருளில் தமிழ் சமூக ஆளுமைகளை அடையாளப்படுத்திஆவணப்படுத்தும் பெரும் முயற்சியில் காலடி எடுத்து வைத்து அதன் முதலாவது பாகமான 'யார் எவர் கிளிநொச்சி 2023' கடந்த 2023 கார்த்திகை மாதம் வெளியிடப்பட்டிருந்தது. இலங்கையை பூர்வீகமாகக் கொண்டு இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் வாழ்கின்ற தமிழ் சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் சமூக முன்னேற்றத்திற்காக உழைத்தவர்களை, உழைக்கின்றவர்களை ஆவணப்படுத்தும் ஒரு முயற்சி இதுவாகும். இந்த ஆவணப்படுத்தும் முயற்சி காலத்திற்கு காலம் புதுப்பிக்கப்பட்டு இலங்கையின் பல பகுதிகளையும் உள்ளடக்கியதாக வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் இதன் 2ஆம் பாகத்துக்கான தகவல்களை திரட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது. தமிழ் சமூகத்தின் முக்கியமான ஆளுமைகளை ஆவணப்படுத்துவதும் அவர்கள் தொடர்பான விபரங்களை தெரியப்படுத்துவதும் ஆளுமைகள் மற்றும் கலைஞர்களுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்துவதும் ஆளுமைகள் பற்றி எதிர்கால தலைமுறைகளுக்கு தெரியப்படுத்துவதுமே இந்தமுயற்சியின் முக்கியமானகுறிக்கோளாகும்.

மேலும் துறைசார்ந்த ஆளுமைகளிடையேயும் , தமிழ் சமூகத்தின் வாழ்நிலையை மேம்படுத்த நினைப்பவர்களிடையேயும் ஒரு வலைப் பின்னலை ஏற்படுத்தி செயற்திறனை அதிகரிப்பதும் இந்தமுயற்சியின் மைய நோக்கமாகும். கிளிநொச்சி மாவட்ட ஆளுமைகள், தங்களைப் பற்றியும் தாங்கள் சமூக மாற்றத்திற்காக ஆற்றிய பணிகள் தொடர்பிலும் கலை வளர்ச்சிக்கான தங்களுடைய பங்களிப்பு தொடர்பிலும் தங்களுடைய கலைஆர்வம் தொடர்பிலும் ஆவணப்படுத்தத் தயாராக உள்ளதாக இவர்கள் தெரிவித்துள்ளார்கள். இறுதியாக, இப்படிவத்தைப் பூர்த்தி செய்து புகைப்படம் ஒன்றை, முழுப்பெயருடன் இணைத்து whoiswhotamil@gmail.com என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் கொழும்பு மட்ட தேசிய அபாகஸ் போட்டி

Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் கொழும்பு மட்ட தேசிய அபாகஸ் போட்டி இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வத்தளை OKI ஜுனியர் கனிஷ்ட பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் பணிப்பாளரும், பிரதம பயிற்றுவிப்பாளருமான திருமதி V.அரசிளங்குமாரி கிருஷ்ணதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு OKI சர்வதேச பாடசாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் கலகமகே பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். வத்தளை OKI ஜுனியர் கனிஷ்ட பாடசாலையின் அதிபர் திருமதி நிஷானி ரத்நாயக்க, வத்தளை இலங்கை வங்கியின் முகாமையாளர் திருமதி எஸ்.டி. ஷாந்திரத்ன, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் டீ. செந்தூரன், வினாத்தாள் திருத்தும் பணிக்குழாமின் தலைவி, வத்தளை, பிரதேச செயலகத்தின் ஆரம்ப நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கங்கா ஹேமந்த்த ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வகையில் பொருளாதாரத்தை கட்டமைப்போம்

## கொழும்பு சுற்றுலா நகரமாக மாற்றப்படும்

மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வகையில் பொருளாதாரத்தை கட்டமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

சரிவடைந்த பொருளாதாரத்தை இரண்டு வருடங்களில் மீட்க முடிந்ததென தெரிவித்த ஜனாதிபதி, சரிவடையாத வகையில் வலுவான பொருளாதாரத்தை கட்டமைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதாகவும் உறுதியளித்தார்.

கொழும்பு ITC ரத்னதீப அதிசொகுசு ஹோட்டல் கட்டடத்தை நேற்று முன்தினம் (25) திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். காலி முகத்திடலுக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ITC ரத்னதீப ஹோட்டல் இந்திய ITC ஹோட்டல் குழுமத்தினால் இந்தியாவுக்கு வெளியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் முதலாவது கட்டடமாகும்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

"ITC நிறுவனத்தை இலங்கைக்கு வரவேற்கிறேன். இது ஆசியாவின் முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டலான காலி முகத்திடல் ஹோட்டலுக்கு முன்பாக அமைந்துள்ளது. அதற்கு அருகில் இந்திய தாஜ் ஹோட்டலும் உள்ளது. சிங்கப்பூர் ஹோட்டலான சங்ரீலாவும் அருகில் அமைந்துள்ளது. அதற்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ITC ஹோட்டலின் பின்புறத்தில் சினமன் கிரேண்ட் ஹோட்டலும் அமைந்திருக்கிறது. இவை அனைத்தும் இலங்கையின் ஹோட்டல் தொழில்துறைக்குள் உள்ளடங்கும். ஒபரோய் ஹோட்டல் இலங்கையில் அமைக்கப்பட்டு முதலாவது நகர ஹோட்டலாக மேம்படுத்தப்பட்டிருந்த நிலையில், நீண்டகாலத்திற்கு பின்னர் இந்தியாவே இங்கு சுற்றுலா ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்திருக்கிறது. அதனால் இந்தியா, சிங்கப்பூரை தளமாக கொண்ட ஹோட்டல்களும் இங்கு அமைந்துள்ளன. ஆசியாவில் எங்கும் இவ்வாறானதொரு இடத்தை நீங்கள் காண முடியாது.



இதனால் கொழும்பு நகரம் சுற்றுலா கேந்திரமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவுக்குள் நிர்மாணிக்கப்பட்ட 10,000 அறைகளை கொண்ட ஹோட்டல் கட்டடத்திற்கு பின்னர் அடுத்தபடியாக அவர்கள் செல்லக்கூடிய சிறந்த இடமாக ITC நிறுவனம் இலங்கையை தெரிவு செய்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அவர்களால் மேம்படுத்தக்கூடிய பல இடங்கள் இலங்கையில் அமைந்துள்ளன. அடுத்த தசாப்தத்தில் இலங்கை ஜனாதிபதி மாளிகை மாதிவெலவிற்கு கொண்டு செல்லப்படும். அத்தோடு கொழும்பு குடியரசு சதுக்கம், கடற்படை தலைமையகம், பழைய இறங்குதுறை, சுங்கத் தலைமையகம், தபால் நிலையம் என அனைத்தையும் கொழும்பு சுற்றுலா நகரத்தின் அங்கமாக மேம்படுத்த முடியும்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையை நீங்கள் மறந்திருக்கப்போவதில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்கள் அதில் பங்கெடுத்தனர். இருப்பினும் அந்த பொருளாதார சரிவிலிருந்து இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது. தற்போதும் கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் பல காணப்படுவதால் சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும். சுற்றுலா வியாபாரத்தினால் இலங்கையை துரிதமாக மீட்கலாம். அதற்கான வசதிகளை வழங்க நாம் தயார்.

அவ்வாறானதொரு மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாதவாறான பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டும். அதற்கு தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்த திட்டங்களால் பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும். பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களான அலி சப்ரி, பிரசன்ன ரணதுங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இந்திய உயர்ஸ்தானிகர் சந்துஷ் ஜா, பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி சவேந்திர சில்வா, ITC ரத்னதீப ஹோட்டல் குழுமத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சஞ்ஜீவ் ஜூரி உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஏழு நாடுகளுக்கு Free விசா வழங்க அமைச்சரவை அனுமதி

## மேலும் 60 நாடுகளுக்கு வழங்கவும் தீர்மானம் சபையில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

**லோரன்ஸ் செல்வநாயகம்**




நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் ஏழு நாடுகளுக்கு Free விசா வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அந்த வகையில் இந்தியா, ரஷ்யா, சீனா, இந்தோனேசியா, தாய்லாந்து உள்ளிட்ட ஏழு நாடுகளுக்கு இவ்வாறு Free விசா வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் 60 நாடுகளுக்கு Free விசா வழங்குவதற்கான தீர்மானம் தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 27/2 இன் கீழ் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"நாடுகளுக்கு Free விசா வழங்குவது தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இவ்வாறான விசாவை அறிமுகப்படுத்தும் போது 30 நாட்களுக்கு ஒரு முறை வருகை தரக்கூடிய விசா முறைமையொன்று இல்லாமை தொடர்பில் நிலவும் சிக்கல்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

அது தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசப்படவில்லை என கூறப்படுகிறது. எனினும் நிதிக் குழுவில் அது தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் அதனை பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்க முடியும். விசாவை பெற்றுக்கொடுப்பதற்கு 5,100 ரூபா அறவிடப்படுகிறது. அந்த வகையில் Free விசா வழங்கும் போது அவர்களின் முறைமையின்படி செயற்பட வேண்டும்.

சுற்றுலாத்துறையில் நாடு தற்போது முன்னேற்றமடைந்து வருகின்றது. அந்த வகையில் சுதந்திரமாக பயணிக்கக்கூடிய விசா முறை அவசியம். இரண்டு மாதங்களை அடிப்படையாகக் கொண்டாவது அது அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் அனுமதி இன்றி அதற்கான வர்த்தமானியை வெளியிட முடியாது" எனத் தெரிவித்தார்.

# காசா சிறுவர் நிதியத்துக்கு நன்கொடை கையளிப்பு








ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட காசா சிறுவர் நிதியத்துக்கான (Children of Gaza Fund) நிதி நன்கொடைகள் நேற்று (26) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டன. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கிண்ணியா கிளை 53,00,000 ரூபாவையும், கல்முனை வலயக் கல்வி அலுவலகம் 31,28,500 ரூபாவையும், Sports First Foundation 3,00,000 ரூபாவையும் நன்கொடையாக வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பாகிஸ்தான் தேசிய தின வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் அரசியல் தலைவர்கள், இராஜதந்திர அதிகாரிகள், சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள், பாகிஸ்தானிய ஆதரவாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கம்பஹா லக் சியனே மகா புதுவருட கொண்டாட்டம்

கம்பஹா மாநகரசபை மைதானத்தில் கம்பஹா லக் சியனே மகா புதுவருட கொண்டாட்டம் நாளை (28) நடைபெறவுள்ளது.

இதன்போது ஆண்கள், பெண்களுக்கான பந்தய சைக்கிள் ஓட்டப் போட்டி, அழகுராணி தெரிவு, சிகிதி புதுவருட ஆணழகன் மற்றும் அழகுராணி தெரிவு, மரதன் ஓட்டம், கயிறு இழுத்தல், வழுக்குமரம் ஏறுதல், தலையணை சண்டை, இசை நிகழ்ச்சி ஆகியன நடைபெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ரஞ்சன் லங்கா இன்ஸ்டிட்யூட் முன்பாக காலை 6.30 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது. முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாவும், 02ஆம் பரிசாக 75,000 ரூபாவும், 03ஆம் பரிசாக 50,000 ரூபாவும், 10ஆம் பரிசுவரை 25,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கமைய கம்பஹா பிரதேச செயலகம், கம்பஹா பிரதேச சபை, கம்பஹா பிரதேச அரச நிறுவனங்கள், கம்பஹா தலைமையக பொலிஸார் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.



சென்னையில் அண்மையில் நடைபெற்ற 'ITC Grand Chola' நிகழ்வின் போது சென்னைக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஷ்வரன் மற்றும் நல்லி சில்க் புடைவையகத்தின் தலைவரும் பிரபல தொழிலதிபருமான நல்லி குப்புசாமி செட்டி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் சந்தித்து கலந்துரையாடினர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவு, வர்த்தக நடவடிக்கைகள், கலாசார பரிமாற்றம் ஆகிய விடயங்கள் தொடர்பாக இவர்கள் இருவரும் தமது கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவ விநியோக பிரிவு பணிப்பாளர்

# பிணைமனு 30ஆம் திகதி வரையில் ஒத்திவைப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோக பிரிவின் பணிப்பாளர் டொக்டர் கபில விக்கிரமநாயக்கவின் பிணை மனுவை எதிர்வரும் 30ஆம் திகதிவரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (26) உத்தரவிட்டுள்ளது. பிணைமனு தொடர்பான உத்தரவு நேற்று அறிவிக்கப்பட இருந்தது. ஆனால் உத்தரவு தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் 30ஆம் திகதி வெளியிடப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.என். சமரக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய தரமற்ற தடுப்பூசிகளை கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் மருத்துவ திணைக்களத்தின் விநியோக பிரிவின் பணிப்பாளர் டொக்டர் கபில விக்கிரமநாயக்க உள்ளிட்டோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அற்றோணி தத்துவத்தை பயன்படுத்தி

# வெளிநாட்டிலுள்ள உறவினரின் காணியை விற்ற நபர் யாழில் கைது

**யாழ். விசேட நிருபர்**



வெளிநாட்டிலுள்ள நபர் ஒருவரின் காணியை மோசடி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள தனது காணியை பராமரிப்பதற்காக யாழ்ப்பாணத்தை சேர்ந்த உறவினர் ஒருவருக்கு அற்றோணித் தத்துவத்தை முடித்து கொடுத்துள்ளார்.

அற்றோணித்தத்துவத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தி காணியை 03 துண்டுகளாக பிரித்து ஒருபகுதியை நபர் ஒருவருக்கு விற்பனை செய்ததுடன், மற்றுமொரு பகுதியை வங்கியில் ஈடுவைத்துள்ளார். மற்றைய காணியை தனது உறவினருக்கு நன்கொடையாக கொடுத்து, அதனை மீள அறுதியாக பெற்றுள்ளார். இது தொடர்பில் அறிந்த காணி உரிமையாளர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து, காணி விற்பனையில் ஈடுபட்ட நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணையை பொலிஸார் முன்னெடுத்த பின்னர், யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இலங்கையிலிருந்து மலேஷியா ஊடாக

# ஐரோப்பாவுக்கு சிறுவர்கள் கடத்தப்பட்டு விற்பனை

## சந்தேக நபர் விமான நிலையத்தில் கைது

சிறுவர்களை மலேஷியா ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்துச்சென்று அங்கு அவர்களை விற்பனை செய்வதற்கு உதவும் பிரதான நபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குடியவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளையைச் சேர்ந்த 76 வயதான நபரே இவ்வாறு நேற்று முன்தினம் (25) கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை சிறார்கள் 17 பேரை இவர் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று அவர்களை ஆட்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்குள்ளாகியிருந்தாரென தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள புலனாய்வுப் பிரிவின் இடர் மதிப்பீட்டுப் பிரிவுக்கு இவர் தொடர்பில் விசேட மற்றும் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குடிவரவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதற்கமைவாக இலங்கை குடிவரவு திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் இடர் மதிப்பீட்டுப் பிரிவு அதிகாரிகள் அவரை உன்னிப்பாகக் கண்காணித்து வந்ததுடன், மலேசிய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கும் இவர் குறித்து அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த பின்னணியில் நேற்றையதினம் 14 வயது சிறுவனை அவரது தந்தையுடன் மலேஷியாவுக்கு அழைத்துச் சென்ற போது கோலாலம்பூர் விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் அவர்களை கைது செய்து இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை மேற்கொண்டனர்.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இலங்கை சிறுவர்கள் 17 பேரை மலேஷியாவுக்கு அழைத்துச் சென்றுள்ளாரென்றும் அவர்கள் அனைவரும் தமிழர் என்பதும் தற்போது தெரியவந்துள்ளது.

கடத்தப்பட்ட 13 சிறுவர்களின் தகவல்கள் குடிவரவு திணைக்களப் பிரிவின் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 08 சிறுவர்கள் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் மீதமுள்ள 05 பேர் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 18

### குறள் தரும் சிந்தனை

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்

மறைக்கப்பட வேண்டிய இரகசியம் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில், ஓடிச் சென்று பிறருக்குச் சொல்லுகின்ற கயவர்களைத், தமுக்கு என்னும் கருவிக்கு ஒப்பிடலாம்.

# பயிர்ச் செய்கையாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!

இலங்கையில் தற்போது மரக்கறி வகைகளின் விலைகள் பெருமளவில் குறைந்துள்ளன. விளைச்சல் அதிகரித்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலைகள் குறைவடைந்துள்ளன என்பது தெரிந்த விடயம். மரக்கறி வகைகளின் விலைகள் மிகவும் குறைவடைந்துள்ளதால் மக்கள் அவற்றை தற்போது தாராளமாகவே வாங்குகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையில் உள்நாட்டு மரக்கறிகள் ஒரு கிலோ இரண்டாயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டமை நாம் அறிந்த செய்தியாகும். அவ்விலையேற்றம் காரணமாக மக்கள் மரக்கறிகளை வாங்குவதையே பெருமளவில் குறைத்துக் கொண்டனர். இதன் காரணமாக மரக்கறி வியாபாரிகளின் வருமானமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்து வந்த பெருமழை காரணமாகவே கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மரக்கறிச்செய்கை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் மரக்கறித் தோட்டங்கள் வெள்ளத்தினால் முற்றாக அழிவுற்றிருந்தன. மரக்கறிச் செய்கை நிலங்களை விவசாயிகள் முற்றாகவே கைவிட வேண்டியுமிருந்தது. குறைந்த அளவான மரக்கறியே அறுவடை செய்யப்பட்டதால், அவற்றின் விலைகள் கிடுகிடுவென அதிகரித்திருந்தன.

மழை ஓய்ந்த பின்னர் விவசாயிகள் மீண்டும் மும்முரமாக மரக்கறிச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்தனர். அனைத்து விவசாயிகளும் ஒரே நேரத்தில் மரக்கறிச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்ததால், தற்போது மரக்கறி வகைகளின் விலைகள் வெகுவாக சரிந்துள்ளன. நாட்டின் சில பிரதேசங்களில் ஒரு கிலோ மரக்கறியை நூறு ரூபாவுக்குக் கூட வாங்கக் கூடிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் வீதியோரங்களில் மரக்கறிகள் குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. நாட்டின் பல்வேறு பகுதிளிலும் இருந்து சிறியரக வாகனங்களில் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்குச் செல்கின்ற வியாபாரிகள், அங்கிருந்து பெருமளவு மரக்கறிகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர். அம்மரக்கறிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வீதியோரங்களில் குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மரக்கறி வகைகளின் விலைகள் இவ்வாறு பெருமளவில் குறைந்திருப்பது நுகர்வோரைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான விடயம் ஆகும். அன்றாட வாழ்க்கைச் செலவு குறைகின்றதென்பது பாவனையாளர்களைப் பொறுத்தவரை மகிழ்ச்சியானதாகும். ஆனால் மரக்கறிச் செய்கையாளர்களின் நிலைமைதான் பரிதாபத்துக்குரியது.

மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியுற்றதால் செய்கையாளர்களின் வருமானம் பெருமளவில் குறைந்து போயுள்ளது. பயிர்ச்செய்கையில் முதலீடு செய்ததைக் கூட மீளப்பெற முடியாமல் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியதாகும்.

மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவதற்காக அவர்கள் செலவிட்ட பணமும், உழைப்பும் கொஞ்சநஞ்சமல்ல. அடுத்தவர்களிடம் கடன் பெற்று, தங்கநகைகளை அடகு வைத்து என்றெல்லாம் பணத்தைப் பெற்று அவர்கள் மரக்கறிச் செய்கைக்காக அதிகளவில் செலவிட்டனர். அதுமாத்திரமன்றி, மரக்கறிச்செய்கைக்கான அவர்களின் உடலுழைப்பும் அதிகம்.

மரக்கறி அறுவடையின் போது கிடைக்கும் விளைச்சல்தான் அவர்களது உழைப்புக்கான ஊதியம் ஆகும். விளைச்சலின் போது கிடைக்கின்ற பணத்தையே அவர்கள் முழுமையாக நம்பியிருந்தனர். விளைச்சலின் போது கிடைக்கின்ற பணத்தைக் கொண்டே அத்தனை கடன்களையும் ஈடு செய்ய முடியுமென்பதுதான் அவர்களது நம்பிக்கையாக இருந்தது.

ஆனால் அத்தனை நம்பிக்கைகளும் இப்போது வீணாகி விட்டன. மிகவும் குறைந்த விலைக்கே அவர்கள் தங்களது விளைச்சலை மொத்தவியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மரக்கறிச் செய்கைப் பிரதேசங்களுக்கு நேரடியாகச் செல்கின்ற மொத்த வியாபாரிகள் மிகவும் குறைந்த விலையில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

விளைந்த மரக்கறிகளை நீண்ட காலத்துக்கு அறுவடை செய்யாமல் வைத்திருக்க முடியாது. எவ்வாறாயினும் உடனடியாகவே விற்பனை செய்து விட வேண்டும். அதனால் காலடி தேடி வருகின்ற மொத்தவியாபாரிகளுக்கு குறைந்த விலையிலேயே அவற்றை விற்பனை செய்கின்றனர்.

மரக்கறிச் செய்கையாளர்கள் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் வியாபாரிகளும் நுகர்வோரும் இக்காலத்தில் நன்மையடைகின்றனர். மரக்கறிகளின் உற்பத்தி அதிகரிப்பதும், அவற்றின் விலைகள் குறைவடைவதும் தீமையான விடயங்களல்ல. ஆனாலும் மரக்கறிச் செய்கையாளர்கள் ஓரளவேனும் இலாபம் பெறக்கூடிய வகையில் சந்தைப்படுத்தல் அமைவதே சிறந்தது. இந்த விடயத்தில் எந்தத் தரப்பினரும் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கப்படலாகாது.

மரக்கறி கொள்வனவு செய்யும் விடயத்தில் 'மாபியா' குழுக்கள் செயற்பட்டு வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன. அவர்கள் செய்கையாளர்களிடம் மிகக்குறைந்த விலையில் கொள்வனவு செய்து அதிக இலாபமீட்டுவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டாலேயே மரக்கறி உற்பத்தியாளர்கள் பயனடைய முடியுமென்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

editor.tkn@lakehouse.lk

# தமிழகத்தில் கூடுதல் ஆசனங்களை தி.மு.க கைப்பற்றப் போவது உறுதி!

## வெற்றி நம்பிக்கையுடன், காங்கிரஸின் வெற்றிக்காக வடமாநிலங்களில் பிர–சாரம் செய்யப் புறப்படுகிறார் ஸ்டாலின்



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதுமே, தமிழ்நாடு முழுவதும் தீவிர பிரசார சுற்றுப்பயணத்தை தொடங்கிய தி.மு.க தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின், தினந்தோறும் 2 லோக்சபா தொகுதிகளை உள்ளடக்கி சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டிருந்தார்.

காலையில் மக்களை நேரடியாகச் சந்தித்து வாக்கு சேகரிப்பது, மாலையில் பொதுக்கூட்டங்கள் வாயிலாக வாக்கு சேகரிப்பது என்று தேர்தல் முடியும் வரை சுற்றிச் சுழன்று பணியாற்றினார் தி.மு.க தலைவர் ஸ்டாலின். கடந்த மார்ச் 22ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி வரை 20 பிரமாண்ட பொதுக்கூட்டங்களில் தி.மு.க கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் ஸ்டாலின் தேர்தல் பரப்புரை மேற்கொண்டிருந்தார்.

தமிழ்நாட்டில் தேர்தல் வாக்கெடுப்பு நிறைவடைந்துள்ள நிலையில், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தி.மு.க நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் என பல தரப்பினரிடமும் பேசி வருகிறார் ஸ்டாலின்.

நடந்து முடிந்துள்ள தேர்தல் தொடர்பாக பல்வேறு அறிக்கைகளையும் பெற்றுள்ளார் ஸ்டாலின். எங்கெல்லாம் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் தி.மு.க கூட்டணிக்கு வெற்றி கிடைக்கும், எங்கெல்லாம் இழுபறி சூழல் இருக்கும் என்பதை அவர் கேட்டறிந்து வருகிறார்.

இந்த அறிக்கைகளைப் பொறுத்தவரை, தி.மு.க கூட்டணிக்கு பெருவெற்றி கிடைக்கும் எனச் சொல்லப்படுவதால் மகிழ்ச்சியில் இருக்கிறார் ஸ்டாலின்.

தமிழக நிலைமை இவ்வாறிருக்க, அடுத்தகட்டமாக, 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து டெல்லி உள்ளிட்ட சில மாநிலங்களில் பிரசாரம் செய்வதற்கு முதலமைச்சர் ஸ்டாலின் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதல்வர் ஸ்டாலினின் இந்தப் பிரசாரப் பயணத்திற்கான திகதிகள், இடங்கள் என நிகழ்ச்சிநிரல் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது. முதல்வர் ஸ்டாலினை, தி.மு.க நிர்வாகிகள் பலர் சந்தித்துப் பேசி வரும் நிலையில், வடமாநிலங்களுக்கும் தான் சென்று தேர்தல் பிரசாரம் செய்ய உள்ள தகவலை அவர் அவர்களிடம் பகிர்ந்துள்ளார். இந்த விஷயம் தற்போது தமிழக அரசியல் வட்டாரத்தில் பரவியுள்ளது.

இந்தியா கூட்டணி உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த தலைவர்களில் ஒருவர் ஸ்டாலின் என்றால் மிகையில்லை. காங்கிரஸ் தலைமையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் திரள வேண்டும் என ஸ்டாலின் உறுதியாக கூறி வந்தார். சில கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியேறினாலும், காங்கிரஸுடன் உறுதியாக நின்று வருகிறார்.

தேர்தலுக்குப் பிறகு இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்தால் தி.மு.கவுக்கு முக்கிய இடம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில்தான் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் செய்வதற்காக வடமாநிலங்களுக்குச் செல்ல உள்ளார்.

இதேவேளை இந்தியாவில் லோக்சபா தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்களிப்பு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கேரளா, கர்நாடகா உட்பட 13 மாநிலங்களில் வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. 13 மாநிலங்களில் 89 தொகுதிகளுக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் லோக்சபா தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. முதல் கட்டத் தேர்தல் கடந்த 19 ஆம் திகதி 21 மாநிலங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு நடைபெற்றது. இவற்றில் தமிழ்நாடு மற்றும் புதுவையில் உள்ள 40 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் 65.54 சதவீத வாக்குகள் பதிவாகின.

கேரளா (20 தொகுதிகள்), ராஜஸ்தான் (13), மகாராஷ்டிரா (08), அசாம் (05), சத்தீஸ்கர் (03), கர்நாடகம் (14), உத்தர பிரதேசம் (08), மத்திய பிரதேசம் (07), பீகார் (05), மேற்கு வங்கம் (03), மணிப்பூர் (01), திரிபுரா (01), ஜம்மு காஷ்மீர் (01) என மொத்தம் 89 தொகுதிகளுக்கு நேற்று 26 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்றது.

கேரளாவில் உள்ள வயநாடு தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி போட்டியிட்டார். அதேபோல் திருவனந்தபுரம் தொகுதியில் சசிதரூர் போட்டியிட்டார்.

இதேசமயம் லோக்சபா தேர்தலில் தமிழ்நாட்டில் தி.மு.க கூட்டணி 29 தொகுதிகளில் உறுதியாக வெற்றி பெறும் என்று தந்தி டி.வி மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழக தேர்தல் தொடர்பாக தந்தி டி.வி சார்பில் கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி தமிழ்நாட்டில் மீண்டும் தி.மு.க கூட்டணி கட்சிகள்தான் அதிக இடங்களைக் கைப்பற்றும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளில் தி.மு.க கூட்டணி 34 இடங்களில் வெற்றிபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தி.மு.க 29 தொகுதிகளில் எளிதாக வெற்றி பெறும் எனவும், 5 தொகுதிகளில் கடும் போட்டிக்கு இடையே வெற்றி பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# கிழக்கில் நூற்றாண்டை நோக்கி பயணிக்கும் இராம கிருஷ்ண மிஷன்

## அம்பாறை மாவட்டத்தில் மக்கள்நல சேவைகள் விஸ்தரிப்பு

கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பிக்கப்பட்டு 98 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. தற்போது செய்து 100 ஆண்டுகள் நிறைவை நோக்கி ஜீவ சேவையுடன் இராமகிருஷ்ண மிஷன் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பொறுப்பேற்ற பின்னர் கிழக்கு எங்கும் பலவகையான மக்கள் மைய நலன்புரி வேலைத் திட்டங்கள் முன்னொருபோதுமில்லாத வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்திலும் காரைதீவை மையமாக வைத்து பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கு முன்னோடியாக காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையத்தில் புதிதாக காரைதீவை மையமாகக் கொண்டு இலவச மருத்துவ சேவைகளும், நடமாடும் கிராமிய மருத்துவ சேவைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதி திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வெள்ளிக் கிழமை தோறும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இம்மருத்துவசேவை இடம்பெற்று வருகின்றது. அங்கு மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் தொற்றா நோய் பற்றிய விழிப்புணர்வு, தற்கொலை தடுப்பு ஆலோசனைகள், போதைப்பொருள் தடுப்பு ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் இலவசமாக மருத்துவ முகாம்களை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்தார்.








அத்தோடு யோக பயிற்சிகள்,இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட கணினி பயிற்சிகள், தியான வகுப்புகள், செவ்வாய்க்கிழமை தோறும் சத்சங்க வகுப்புகள் ஆகியன ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உள அபிவிருத்தி தொடர்பான செயல் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக நடைபெற உள்ளது என்று சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மேலும் தெரிவித்தார்.

வி.ரி.சகாதேவராஜா...

## பூமராங் மின்னிதழ் அறிமுகம்:

# அனைத்துலக பெண்கள் தின சிறப்பிதழாக இம்மாதம் வெளியீடு

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் காலாண்டு மின்னிதழான பூமராங், இம்மாதம் தனது இரண்டாவது இதழை வரவாக்கியிருக்கிறது.

அனைத்துலக பெண்கள் தின சிறப்பிதழாக இம்முறை வெளிவந்துள்ள பூமராங், சிறுகதை, கட்டுரை, நூல் விமர்சனம், வாசகர் முற்றம் மற்றும் சங்கத்தின் சமகால நிகழ்வுகள் பற்றிய தகவல் குறிப்புகளுடனும் பதிவேற்றப்பட்டுள்ளது.

இதன் ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

'அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் மின்னிதழின் வருகை, இந்த ஆண்டு (2024) தமிழர் திருநாள், தைத்திருநாளின் போது ஆரம்பமானது.

இரண்டாவதாக வெளிவரும் இவ்விதழ், உலகெங்கும் வாழும் இஸ்லாமிய மக்களின் புனித நோன்பு அனுட்டிக்கப்பட்ட ரம்ஸான் பண்டிகைக் காலத்திலும், இந்து தமிழ் மக்களினால் கொண்டாடப்படும் சித்திரை புதுவருட காலத்திலும் வெளிவருகின்றது.

இந்தப் பண்டிகைகளை கொண்டாடும் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலையும் இலக்கியமும் இனத்தின் கண்கள் என்ற தாரக மந்திரத்துடன், அறிந்ததை பகிர்தல், அறியாததை அறிந்துகொள்ள முயற்சித்தல் என்னும் நோக்கத்துடனும் கடந்த இரண்டு தசாப்த காலமாக இயங்கிவரும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வளர்ச்சியில் மற்றும் ஒரு மைல்கல்லாக திகழ்ந்திருக்கும் பூமராங் மின்னிதழுக்கு தமிழ் கூறும் நல்லுலகில் சிறந்த வரவேற்பு கிட்டியிருந்தது.

சில வாசகர்கள் பூமராங் குறித்த தாங்களது வாசிப்பு அனுபவத்தையும் ஊடகங்களில் பகிர்ந்து கொண்டார்கள்.

மெல்பனில் நீண்டகாலமாக இயங்கு தமிழ் மூத்த பிரஜைகள் அமைப்பினர், முதலாவது பூமராங் மின்னிதழை அச்சிட்டு, பல பிரதிகளை தங்கள் அமைப்பின் மாதாந்த ஒன்றுகூடலிலும் அறிமுகப்படுத்தி, தங்கள் உறுப்பினர்களுக்கு விநியோகித்தனர்.

அதன் மூலமும் பூமராங் மின்னிதழுக்கு சிறந்த வரவேற்பு கிட்டியது. சில மூத்த பிரஜைகளுக்கு, தாங்களும் எழுத்துப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வத்தையும் பூமராங் மின்னிதழ் தூண்டியிருக்கிறது.


கிறிஸ்டி நல்லரெத்தினம்

சங்கம், இந்த ஆண்டின் தொடக்கம் முதல் அடுத்தடுத்து சில நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திருக்கிறது.

பூமராங் மின்னிதழின் முதலாவது இதழ் வெளியீட்டினையடுத்து, மார்ச் மாதம் 10 ஆம் திகதி தமிழக எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களுடனான சந்திப்பு கலந்துரையாடல் நிகழ்வினையும், மார்ச் மாதம் 23 ஆம் திகதி அனைத்துலக பெண்கள் தின விழாவை மெய்நிகரிலும், ஏப்ரில் மாதம் 07 ஆம் திகதி, இலங்கை எழுத்தாளர்களுக்காக நடத்திய இலக்கிய நூல்களை தெரிவுசெய்யும் போட்டியில் பரிசுபெற்ற நூல்களுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வினை மெய்நிகரிலும் நடத்தியிருக்கிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக இயங்கிவரும் சங்கத்தின் காலாண்டு இதழையும் மூத்த – இளம் தலைமுறையினரின் ஆக்கங்களுக்கு களம் வழங்கும் வகையில் வெளியிடுவதற்கு விரும்புகின்றோம்.

கலை, இலக்கிய, ஊடகத்துறைகளில் ஆற்றல் மிக்கவர்கள், தங்கள் படைப்புகளை பூமராங் மின்னிதழுக்கு அனுப்பிவைக்கலாம்'.

இவ்விதழில், ஜெர்மனியிலிருந்து சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) இலங்கையிலிருந்து ஞா. டிலோசினி, அவுஸ்திரேலியாவில் வதியும் சிவயோகராணி யோகானந்தன், அபிதாரிணி சந்திரன், லெ. முருகபூபதி, பாடும்மீன் சு. ஶ்ரீகந்தராசா, ஆரீஃப் இஸ்மாயில் , தாமரைச் செல்வி, கனகா. கணேஷ், கிறிஸ்டி நல்லரெத்தினம் ஆகியோரின் ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

மறைந்த மூத்த எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புகளையும் அறிமுகப்படுத்தும் வரிசையில் பெட்டகம் என்ற பகுதியும் இவ்விதழில் ஆரம்பமாகியிருக்கிறது.

இம்முறை பெட்டகத்தில், ஈழத்தின் மூத்த தலைமுறை முற்போக்கு எழுத்தாளரும் கனடாவில் மறைந்தவருமான என். கே. ரகுநாதன் 1951 ஆம் ஆண்டு எழுதிய 'நிலவிலே பேசுவோம்' என்ற சிறுகதை இடம்பெற்றுள்ளது.




கடந்த தை மாதம் வெளியான முதலாவது பூமாரங் இதழைப்போன்று நேர்த்தியாகவும் பொருத்தமான ஓவியங்களுடனும் வெளிவந்துள்ள பூமராங் இரண்டாவது இதழை வடிவமைப்பதில் தனது தீவிர அக்கறையை காண்பித்திருக்கிறார், அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் நடப்பாண்டு தலைவரும் ஓவியரும் எழுத்தாளருமான கிறிஸ்டி நல்லரெத்தினம்.

பிரதிகளை மின்னஞ்சல் வாயிலாக பெறவிரும்பும் அன்பர்களின் தொடர்புகளுக்கு: atlas25012016@gmail.com



முருகபூபதி...

# இலங்கை, ஈரான் ஜனாதிபதிகள் தலைமையில் கூட்டுச் செய்தியாளர் சந்திப்பு:

## உமாஓயா திட்டம் எரிசக்தி, நீர்ப்பாசனம், நீர் முகாமைத்துவம் துறைகளில் ஈரான்–இலங்கை ஒத்துழைப்பின் அடையாளம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, கடனைத் திருப்பிச் செலுத்துதல், டிஜிட்டல் மய மாக்கல் மற்றும் நவீன தொழில்நுட்பம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை நிறை வேற்றுதல் போன்ற தற்போதைய உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் தமது குரலுக் செவிசாய்க்கப்படுவதை உறுதிசெய்ய கூட்டாக செயற்படுவது அவசியமானது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசியுடன் புதனன்று (24) மாலை இடம்பெற்ற உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தையின் பின்னர் இரு நாட்டு ஜனாதிபதிகள் தலைமையில் இடம்பெற்ற கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இராஜதந்திரம் மற்றும் கலந்துரையாடல் மூலம் பிராந்தியத்தில் மட்டுமன்றி உலகில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் சுபீட்சத்தை உருவாக்க இலங்கையும் ஈரானும் இணைந்து செயற்படுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரானிய



## இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, வர்த்தக, கலாசார உறவுகளை விரிவுபடுத்துவதில் எல்லை இல்லை

### ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி

ஜனாதிபதி ரைசியின் இலங்கை விஜயம் இருதரப்பிற்கும் நன்மை பயக்கும் எனவும் தெரிவித்தார்.

நாடுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பலஸ்தீன விவகாரம் தொடர்பில் பேசிய ஜனாதிபதி, இலங்கையும் ஈரானும் பலஸ்தீன மக்களுக்கான அரசை கட்டியெழுப்ப சட்டபூர்வமான மற்றும் பறிக்க முடியாத உரிமையை அங்கீகரிப்பதாக தெரிவித்தார்.

1967ஆம் ஆண்டு நிலவிய எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு அண்மித்த இரண்டு நாடுகளை அமைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்த முன்மொழிவுக்கு இணங்க, பாலஸ்தீனப் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் பரந்துபட்ட அரசியல் தீர்வை ஆதரிப்பதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், ஏப்ரல் 24ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட உமா ஓயா திட்டம், எரிசக்தி உற்பத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் ஒத்துழைப்பின் அடையாளமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இந்தத் துறைகளில் உலகளாவிய தென்பிராந்திய நாடுகளுக்கு இடையே தற்போதுள்ள ஒத்துழைப்புக்கு இந்தத் திட்டம் ஒரு முன்மாதிரியாக அமைந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, வர்த்தக, கலாச்சார உறவுகளை விரிவுபடுத்துவதில் எல்லையோ தடையோ இல்லை என இங்கு உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை விரிவுபடுத்துவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நன்மைகள் அடங்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய ஈரான் ஜனாதிபதி, ஈரானுக்கும் இலங்கைக்கும் மிக உயர்ந்த ஆற்றல்கள் மற்றும் திறன்கள் இருப்பதாகவும், இந்த வாய்ப்புகளை இரு நாடுகளுக்கிடையில் பரிமாறிக் கொள்வது இரு நாடுகளுக்கும் மட்டுமன்றி இரு பிராந்தியங்களுக்கும் நன்மை பயக்கும் எனவும் குறிப்பிட்டார்.கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"எனது அழைப்பை ஏற்று இலங்கைக்கு விஜயம் செய்து, உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையின் தென்கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் 120 மெகாவோர்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின் கட்டமைப்பில் சேர்ப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை நாங்கள் இணைந்து திறந்து வைத்தோம். இத்திட்டமானது இலங்கையின் பொருளாதார செயற்பாடுகளை அதிகரிப்பதுடன், உணவு உற்பத்தி, நிலையான மின்சார விநியோகம் மற்றும் பிரதேச இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு பங்களிக்கும்.

உமா ஓயா திட்டத்திற்கு நிதியுதவி வழங்கியதற்காக மட்டுமல்லாமல், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் அறிவைப் பகிர்ந்ததற்காக ஈரான் இஸ்லாமிய குடியரசிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் ஊடாகக் கிடைக்கும் பலனை அப்பகுதி மக்களுக்கு வழங்கியுள்ளோம். பாரசீகம் மற்றும் இலங்கையின் அனுராதபுர காலத்தின் இரண்டு பண்டைய நீர்ப்பாசன மரபுகளின் நவீன கால கலவையாக இந்தத் திட்டத்தை நான் அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

நவீன உலகின் தேவைகளான அறிவியல், தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் எரிசக்தி உற்பத்தி ஆகிய துறைகளில் பெரும் சாதனை படைத்திருக்கும் ஈரான் இஸ்லாமிய குடியரசை நான் வாழ்த்துகிறேன்.

இன்று ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயா திட்டம், எரிசக்தி உற்பத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கிடையில் தற்போதுள்ள ஒத்துழைப்பின் அடையாளமாக மாறி, உலகளாவிய தெற்கு நாடுகளுக்கிடையில் தற்போதுள்ள ஒத்துழைப்புக்கு எடுத்துக்காட்டாக திகழ்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது கலந்துரையாடல்களின் போது, இலங்கையின் கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர், இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டிற்கு ஈரான் இஸ்லாமியக் குடியரசு வழங்கிய ஆதரவிற்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இலங்கையின் அண்மைய பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சி குறித்தும் நான் ஜனாதிபதி ரைசியிடம் தெரிவித்தேன். மேலும் இலங்கையின் எதிர்கால முன்னேற்றம் மற்றும் சுபீட்சம் குறித்து ஜனாதிபதி ரைசி நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும், எங்கள் கலந்துரையாடலின் போது, இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல், அரசியல் மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர ஆர்வமுள்ள முக்கிய பகுதிகள் குறித்து நாங்கள் கவனம் செலுத்தினோம்.

எமது உறவுகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், கலாசாரம், கல்வி, இளைஞர் விவகாரம், ஊடகம், சுற்றுலா மற்றும் சினிமா ஆகிய துறைகளில் இலங்கை அரசாங்கத்திற்கும் ஈரான் அரசாங்கத்திற்கும் இடையில் 05 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்தத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பிற்கான பெரும் சாத்தியக்கூறுகள் மற்றும் இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கும் நாங்கள் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை, அணிசேரா நாடுகளின் அமைப்பு (NAM), G77 அமைப்பு மற்றும் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் அமைப்பு (IORA) போன்ற பிற குழுக்கள் உட்பட பலதரப்பு மற்றும் பிராந்திய அமைப்புகளில் இரு நாடுகளும் நெருக்கமாக இணைந்து செயல்படுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பலதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, தற்போதைய உலகளாவிய சவால்கள் குறித்து திறந்த மற்றும் பயனுள்ள உரையாடலில் ஈடுபட்டுள்ளோம்.

காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, கடனைத் திருப்பிச் செலுத்துதல், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பப் பிளவு, அத்துடன் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைதல் போன்ற தற்போதைய உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் உலகளாவிய தெற்கு நாடுகள் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொண்டோம்.

உலகளாவிய தெற்கின் நாடுகள் தங்கள் சொந்த பலத்தில் கட்டியெழுப்ப வேண்டும்.

இலங்கையும் ஈரானும் இணைந்து இராஜதந்திரம் மற்றும் உரையாடல் மூலம் பிராந்தியத்திற்கு மட்டுமன்றி உலகிற்கும் சமாதானம், பாதுகாப்பு மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பலஸ்தீனத்தின் பாரதூரமான நிலைமை மற்றும் பாலஸ்தீனம் அனுபவிக்கும் கடும் துன்பங்கள் குறித்து எங்களின் ஆழ்ந்த கவலையை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

1967 ஆம் ஆண்டு நிலவிய எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு அண்டை நாடுகளை ஸ்தாபிப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்மொழிவுகளுக்கு இணங்க, பலஸ்தீனப் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் பரந்த அளவிலான அரசியல் தீர்வை ஆதரிப்பதில் இலங்கை உறுதியாக உள்ளது.

அத்தகைய எந்தவொரு தீர்வின் போதும் முதலில் காஸாவில் படுகொலைகளை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக, ஐந்து ஆண்டுகளுக்குள் பலஸ்தீன அரசு நிறுவப்பட வேண்டும். மூன்றாவதாக, இறையாண்மை கொண்ட நாடுகள் மதிக்கப்பட வேண்டும், நான்காவதாக, அனைத்து நாடுகளின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி உடனடியாக காஸாவில் நடக்கும் கொலைகளை உடனடியாக நிறுத்தாவிட்டால், அதற்குத் தீர்வு காண்பது கடினமாகும்.

ஐ.நா கட்டமைப்பை செயலிழக்கச் செய்வதன் ஊடாக , ஐ.நாவைப் போலவே, அந்த அமைப்பின் மீதான நம்பிக்கையை இழக்க வழிவகுக்கும். நமது வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தை நாம் அடைந்துள்ளோம்.

இலங்கை அரசாங்கம் 'காசா குழந்தைகள் நிதியத்தை' ஸ்தாபித்து காசாவில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவதற்காக 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரணச் செயற்பாடுகளுக்கான முகவர் நிறுவனமான UNRWA இற்கு 2024 ஏப்ரல் 1 ஆம் திகதி நன்கொடையாக வழங்கியிருந்தது.

ஈரான் ஜனாதிபதியின் வருகை இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் என்றும், ஒத்துழைப்பிற்கான புதிய வாய்ப்புகள் திறக்கப்படும் என்றும் நான் நம்புகிறேன்.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி கலாநிதி ரைசியின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காகவும், ஈரானிய மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காகவும் எனது நல்வாழ்த்துக்களை கூறுகிறேன்."

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி உரையாற்றியதாவது:

"இலங்கை போன்ற நாட்டிற்கு எனது குழுவுடன் வர முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஈரான் இஸ்லாமிய குடியரசின் அறிவு, தொழில்நுட்பம் மற்றும் வலுவான ஒத்துழைப்புடன் இலங்கையால் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு சிறந்த திட்டத்தை இன்று மக்களிடம் கையளிக்க கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் தற்போதுள்ள ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் சாதாரண திட்டமல்ல. இலங்கை மக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு, ஈரான் தொழில் வல்லுநர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும், நிபுணத்துவத்துடனும் செய்து முடித்திருக்கும் திட்டமாகும்.

இஸ்லாமியப் புரட்சியின் வெற்றியின் பின்னர், இலங்கையுடன் வலுவான இருதரப்பு உறவுகளை ஏற்படுத்த ஈரான் முயற்சித்துள்ளது. பல வருடங்களாக இந்த உறவுகள் விரிவடைந்து வருகின்றன. இன்று இரு நாடுகளுக்கும் இடையில் மிகவும் வலுவான கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், கலாச்சாரம், விவசாயம், சுற்றுலா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம்.

ஈரானும் இலங்கையும் நட்பு நாடுகள். இரு நாடுகளிலும் சிறந்த ஆற்றல்களும் திறன்களும் உள்ளன. இந்த திறன்களை பகிர்தல் மற்றும் பரிமாற்றம் செய்துக்கொள்ளும் பட்சத்தில் இரு நாடுகளுக்கும், பிராந்தியத்திற்கும், நன்மை கிட்டும் என நம்புகிறேன்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக, விவசாய, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ஈரான் இலங்கை பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் அடுத்த கட்ட அமர்வை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கு நன்றி கூறுகிறேன். அச்சுறுத்தல்களாலும் பொருளாதாரத் தடைகளாலும் ஈரான் மக்களைத் தடுத்து நிறுத்த முடியாது. நாட்டின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தை எவராலும் சீர்குலைக்க முடியாது என்பதையும் அன்பான இலங்கை மக்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மேலும், இன்றளவில், ஈரான் இஸ்லாமிய குடியரசை தொழில்நுட்ப வளர்ச்சியில் உயர் முன்னேற்றம் அடைந்த நாடு என்று கூறலாம். பொறியியல் மற்றும் தொழிநுட்பத்துறையில் எமது நிபுணத்துவத்தை இலங்கையுடன் பகிர்ந்து கொள்வதற்கு தயாராக உள்ளோம்.

இதனால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்க எம்மால் முடியும். உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு சிறந்த உதாரணமாகும்.

காஸா எல்லையில் குற்றங்கள் மற்றும் குழந்தைகள் படுகொலைகளை காண்பது வருத்தமளிக்கிறது. முஸ்லிம்கள் மட்டுமின்றி, உலக மக்கள் அனைவரும் இதனை கண்டிக்கின்றனர்.

இறுதிவரை இந்த இனப்படுகொலை அல்லது இந்தக் குற்றங்களுக்கு எதிராக எந்த உறுதியான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது, ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையும் ஏனைய மனித உரிமை அமைப்புகளும் அவற்றின் செயல்திறனை இழந்திருப்பது துரதிர்ஷ்டவசமாகும்.

காசாவின் அப்பாவி மக்களுக்கு எதிரான தாக்குதல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தும், இந்த அப்பாவி மக்களுக்கு தண்ணீர், உணவு, மருந்துகள் உள்ளிட்ட உடனடி உதவிகளை வழங்குவது தொடர்பிலான எங்களின் நிலைப்பாடு குறித்தும் இலங்கை ஜனாதிபதியுடன் ஆலோசித்தேன்.

பாலஸ்தீனத்தின் கோரிக்கையும் அதற்கான தீர்வு என்பனவே இங்குள்ள முக்கியமான பிரச்சினையாகும். அதற்காக ஈரான் இஸ்லாமிய குடியரசு ஒரு முழுமையான ஜனநாயக தீர்வைத் தொடங்கியுள்ளது. அதன்படி பாலஸ்தீனியர்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படும். அதன்படி பாலஸ்தீனியர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் என அனைவருக்கும் வாக்குரிமை கிடைக்கும்.

அதன்மூலம் அடுத்த அரசாங்கத்தை அவர்களால் தீர்மானிக்க முடியும். இது நியாயமானதும் ஜனநாயகமுமான முயற்சியாகும். இஸ்ரேலிய ஆட்சி பாலஸ்தீன மக்களை 75 ஆண்டுகளாக ஒடுக்கி வருகிறது. சொந்த நிலங்கள் சூறையாடப்படுகின்றன. எனவே, கொள்ளையர்களுக்கும், அடக்குமுறையாளர்களுக்கும் அவர்களின் நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுக்க இடமளிக்க கூடாது.

அதற்காக முதலில் அடக்குமுறை செய்வோரை விரட்டியடிக்க வேண்டும். பின்னர் அவர்களால் ஏற்பட்ட அனைத்து பாதிப்புகளுக்கும் இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதனையடுத்து அடக்குமுறையாளர்களையும் கொள்ளையர்களையும் நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

இஸ்ரேலிய ஆட்சியின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் சர்வதேச நீதிமன்றத்தில் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொல்வது, குடியிருப்பாளர்களை அவர்களின் நிலத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது போன்ற செயல்களை எவரும், எந்த குழுவும் செய்யக்கூடாது.

எங்களை வரவேற்று உபசரித்த இலங்கை ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஈரான் அரசாங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன்.

அத்துடன், இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, வர்த்தக, கலாச்சார உறவுகளைவிரிவுபடுத்துவதற்கு எல்லையோ தடையோ இல்லை. அரசியல், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் நமது இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்த இரு நாடுகளும் உறுதியுடன் செயற்பட வேண்டும். இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவதால் பல நன்மைகள் கிட்டுமென நம்புகிறேன்."

இவ்வாறு ஈரான் ஜனாதிபதி தெரிவித்தார்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

## பாகிஸ்தான் பெண்ணுக்கு வாழ்வு தந்துள்ள இந்தியரின் இதயம்!

இதயம் செயலிழந்த பாகிஸ்தான் பெண்ணுக்கு இந்தியர் ஒருவரின் இதயம் மூலம் உயிர் கொடுக்கப்பட்டுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான அறுவைச் சிகிச்சை சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் நடைபெற்றுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த 19 வயது பெண் ஆயிஷா ரஷான். இவர் இதய நோயால் பாதிக்கப்பட்டு, இதய செயலிழப்பு ஏற்பட்டு சிகிச்சைக்காக கடந்த 2014 இல் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டார்.

ஆயிஷாவும், அவரின் குடும்பத்தினரும் வந்துள்ளனர். சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஆயிஷாவை பரிசோதித்த மருத்துவர்கள், இதய செயலிழப்பை சரி செய்ய பொருத்தப்பட்டுள்ள இதய பம்ப் வால்வு ஒன்றில் கசிவு ஏற்பட்டுள்ளதால் கட்டாயம் இதய மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும், இதற்கு சுமார் 35 இலட்சம் ரூபா செலவாகும் எனவும் கூறியுள்ளனர்.

இவ்வளவு பணத்திற்கு என்ன செய்வது எனத் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த ஆயிஷாவின் குடும்பத்திற்கு ஐஸ்வர்யம் அறக்கட்டளை மூலமாக மருத்துவக்குழு உதவி பெற்றுக்கொடுத்துள்ளது. அதுமட்டுமல்லாமல், ஆயிஷாவிற்கு டில்லியில் மூளைச்சாவு அடைந்த ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட இதயமும் வரவழைக்கப்பட்டது. தேவையான பணமும், இதயமும் கிடைத்ததை அடுத்து, ஆயிஷாவிற்கு சென்னை தனியார் மருத்துவமனையில் இதய மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இது தொடர்பாக ஆயிஷாவின் தாய் சனோபர் கூறுகையில், ''வெளிப்படையாக சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவுடன் ஒப்பிடுகையில், பாகிஸ்தானில் நல்ல மருத்துவ வசதிகள் இல்லை. பாகிஸ்தானில் மாற்று அறுவை சிகிச்சைக்கான வசதிகள் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தியாவில் நாங்கள் நட்பாக உணர்கிறோம். இந்திய அரசு மற்றும் இந்திய மருத்துவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்" என்றார்.



சென்னையில் நடந்த சத்திரசிகிச்சை

## தேர்தல் நடைபெறும் வேளையில் கூட்டணிக்குள் உருவான யுத்தம்!



இந்திய லோக்சபா தேர்தலில் பால் திரண்டு வரும் நேரத்தில் பானையை உடைத்த கதையாக இந்தியா கூட்டணியில் முக்கியமான சில பிரச்சினை ஏற்பட்டு உள்ளது. இந்தியா கூட்டணியில் சி.பி.எம், சி.பி.ஐ காங்கிரஸ் இடையே மோதல் ஏற்பட்டு உள்ளது.

ராகுல் காந்தி சமீபத்தில் கேரளாவில் பேசுகையில், "கேரள முதல்வரை ஏன் பா.ஜ.க விமர்சனம் செய்வது இல்லை? அவரை ஏன் பா.ஜ.கவின் ஈடி, சிபிஐ கைது செய்வது இல்லை என்று விமர்சனம் வைத்தார்.

சிபிஎம் தேசிய அளவில் இந்திய கூட்டணியில் இருந்தாலும் கேரளாவில் இல்லை. அப்படி இருக்க கேரளாவில் பினராயி விஜயனை ராகுல் காந்தி விமர்சனம் செய்தார்.

இதற்கு பினராயி "உங்களை பா.ஜ.க பப்பு என்று கூறுவதை நீங்கள் இப்போது நிரூபிக்கிறீர்கள். உங்கள் பாட்டியே எங்களை கைது செய்த கதை எல்லாம் உங்களுக்குத் தெரியுமா? அப்போதே மண்டி போடாதவர்கள் நாங்கள், நீங்கள் எம்மாத்திரம்?" என்று விமர்சனம் செய்தார். இதனால் சி.பி.எம்_ காங்கிரஸ் இடையே இந்திய கூட்டணியில் மோதல் ஏற்பட்டது. இந்த நிலையில்தான் இடது ஜனநாயக முன்னணி (LDF) பிவி அன்வர், "நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் எப்படி இதுபோன்ற விஷயங்களை பேச முடியும்?" என்பது கேள்வியாக மாறி உள்ளது.

"அவர் நேரு குடும்பத்தை சேர்ந்தவரா என்பதே சந்தேகமாக உள்ளது. ராகுல் காந்தியின் டி.என்.ஏ ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பது எனது கருத்து. இதில் எந்த சர்ச்சையும் இல்லை" என்று கடுமையான கருத்துக்களை பேசி உள்ளார்.

இதனால் இந்தியா கூட்டணியில் தற்போது சி.பி.எம், சி.பி.ஐ காங்கிரஸ் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டு உள்ளது. அதுவும் டி.என்.ஏ விவகாரம் காரணமாக மோதல் வலுத்துள்ளது.

### விவசாயத்துறைக்கான உதவிகள் மூலம்

# உணவுப் பாதுகாப்பு நிலையை மேம்படுத்த அமெரிக்கா எதிர்பார்ப்பு

ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சம் ஆகியவற்றைப் பேணி வளர்ப்பதற்கான தமது பரந்துபட்ட இலக்கின் ஓரங்கமாக இலங்கையின் விவசாயத்துறைசார் அபிவிருத்திக்கு அவசியமான உதவிகளை வழங்குவதன் ஊடாக நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க விவசாயத்திணைக்களத்தின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாயம்சார் விவகாரங்களுக்கான துணைச்செயலர் அலெக்சிஸ் டெய்லருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை (26) கொழும்பில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங் கலந்துகொண்டிருந்தார்.



இலங்கையின் விவசாயத்துறைக்கு அமெரிக்க விவசாயத் திணைக்களம் வழங்கிவரும் உதவிகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இடம்பெற்ற இச்சந்திப்பில், உணவுப்பாதுகாப்பை மேம்படுத்தல், காலநிலைமாற்ற சவால்களுக்கு எதிரான மீண்டெழும் தன்மையை ஊக்குவித்தல் என்பவற்றின் ஊடாக இலங்கையின் விவசாய அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா கொண்டிருக்கும் வலுவான உறுதிப்பாட்டினை துணைச்செயலர் அலெக்சிஸ் டெய்லர் வெளிக்காட்டினார்.

அத்தோடு சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சந்தை இணைப்புகள் ஊடாக உணவுப்பாதுகாப்பு மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய சவால்களுக்கு எதிரான மீண்டெழும் தன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் '2024 முன்னேற்றத்துக்கான உணவு' எனும் திட்டத்தில் ஒரு முன்னுரிமை நாடாக இலங்கை வகிக்கும் முக்கிய பங்கு குறித்தும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது. அதுமாத்திரமன்றி இலங்கையில் 15,000க்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்களுக்கு அவர்களது பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கு உதவிய 27.5 மில்லியன் டொலர் பெறுமதியுடைய 'சந்தையை மையப்படுத்திய பாலுற்பத்தி' எனும் செயற்திட்டம் பற்றியும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சம் ஆகியவற்றைப் பேணிவளர்ப்பதற்கான தமது பரந்துபட்ட இலக்கின் ஓரங்கமாகவே இலங்கைக்கு இவ்வுதவிகளை வழங்கியிருப்பதாகவும், இதனூடாக நாட்டின் உணவுப்பாதுகாப்பு நிலையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## இன்றைய பலன்கள்

(27.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
எதிரிகள் விலகுவர். நீண்ட நாட்களாக வாட்டி வதைத்த நோயில் இருந்து விடுபடுவீர்கள். கடன் சுமை குறைய வழி பிறக்கும்.

**ரிஷபம் :**
அனைத்து வழிகளிலும் நன்மை ஏற்பட்டாலும் பெற்றோரின் உடல்நலத்தில் மட்டும் கவனம் தேவைப்படும்.

**மிதுனம்:**
மிக மிக கவனத்தோடு இருக்க வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் சில நடைபெறாமலும் போகலாம்.

**கடகம்:**
வழக்குகள் சாதகமாக முடியும். புதிய இடம், வீடு வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும்.

**சிம்மம்:**
ஆரோக்கிய தொல்லை உண்டு. செய்யும் முயற்சிகளை ஒரு முறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.

**கன்னி:**
பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும்.

**துலாம்:**
வெளிநாடு செல்லும் முயற்சியில் இருந்த தடை அகலும். பிறருக்காக எடுத்த முயற்ச்சியில் ஆதாயம் தரும்.

**விருச்சிகம்:**
தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள்.

**தனுசு:**
பங்குதாரர்களை ஆராய்ந்து அறிந்து சேர்த்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் இடத்தில் மிகுந்த கவனம் தேவை.

**மகரம்:**
உத்தியோகத்தில் பதவி உயர்வு பற்றி நல்ல தகவல் வரும். வீடு வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**கும்பம்:**
கொடுக்கல் வாங்கல்களில் திருப்பதி ஏற்படாது. பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கு ஏற்ற ஆதாயமும் கிடைக்காது.

**மீனம்:**
புனித பயணங்கள் அதிகரிக்கும். கடுமையான முயற்சித்து இதுவரை முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும்.

## சகல தரப்பும் ஒன்றிணைந்தால்...

காணப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக் கொள்வதாக சபையில் குறிப்பிட்ட அவர், அவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை 11 நாட்கள் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. அதற்காக 150 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. நாம் ஒன்றிணைந்து இவ்விடயத்திற்கு தீர்வு காண முன்வராவிட்டால் இன்னும் விவாதங்களை தொடர வேண்டிய நிலையே ஏற்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அவர் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்த முடியாது. அவ்வாறு செயற்படுத்தினால் பலரை பகைத்துக் கொள்ள நேரிடும் என்று குறிப்பிட்டதாக பேராயர் தெரிவித்ததை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு மூன்றாண்டுகள் கடந்துள்ள போதும், பேராயர் ஏன் தற்போது இதனை குறிப்பிட வேண்டும்? அவர் கோட்டாபய ராஜபக்ச கூறியதை ஏற்றுக்கொண்டிருந்தாரா? என்றும் அமைச்சர் கேள்வியெழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விவாதத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட விடயங்கள் மாத்திரமே மீண்டும் மீண்டும் பேசப்படுகின்றன.

நான் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் பேராயருடனும் கத்தோலிக்க திருச்சபையுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் பற்றி தெளிவுபடுத்துவதாக குறிப்பிட்டேன். அவர்களிடம் ஏதேனும் தகவல்கள் இருக்குமானால் அவற்றை வழங்குமாறும் கோரினேன். ஆனால் பேராயரிடமிருந்தோ கத்தோலிக்க திருச்சபையின் தரப்பில் இருந்தோ சாதகமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பான அறிக்கைகள் கிடைக்கவில்லை என்று கத்தோலிக்க திருச்சபையினர் குற்றம் சாட்டினார்கள். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி முழுமையான அறிக்கையை ஒப்படைத்தேன். அறிக்கையின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளிப்படுத்த வேண்டாம் என்று அவர்களிடம் நான் குறிப்பிட்டேன்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக பரிசீலனை செய்த கத்தோலிக்க திருச்சபையினர் கடந்த வாரம் எனக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளோம். குண்டுத்தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமானால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். குண்டுத் தாக்குதல் விவகாரத்தில் பொலிஸ் தரப்பிலும் குறைபாடுகள் காணப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறேன். இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளேன்.

பேராயர் வெளியில் குறிப்பிடும் விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் பேசுகின்றார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 11 நாட்கள் விவாதம் இதுவரை நடைபெற்றுள்ளது. இதற்காக 150 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. நாம் ஒன்றிணைந்து இவ்விடயத்திற்கு தீர்வு காண முன்வராவிட்டால் இன்னும் விவாதங்களை தொடர வேண்டியே வரும் .

## உள்ளூராட்சி சபைகளில்...

இந்நிலையில் உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள 8,400 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க தீர்மானித்துள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வெளிவிவகார அமைச்சர்...

அமைச்சர் அலி சப்ரி, சவுதி அரேபியாவின் ரியாத் நகருக்கு விஜயம் செய்யவுள்ளார். நாளை (28) முதல் நாளை மறுதினம் (29) வரை ரியாத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

உலகப் பொருளாதார மன்றத்தால் ரியாத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இச் சிறப்புக் கூட்டம், பல்வேறு துறைகள் மற்றும் தொழில்துறைகளைச் சேர்ந்த தலைவர்களை ஒன்றிணைத்து, அன்றைய உடனடித் தீர்வுக்கான மற்றும் சிக்கலான பிரச்சினைகளையொட்டி ஒரு விரிவான உரையாடலை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விஜயத்தின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி,

"நகர்ப்புற எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்" மற்றும் "வடக்கிலிருந்து தெற்கு, கிழக்கிலிருந்து மேற்கு, நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்" ஆகிய இரண்டு அமர்வுகளில் குழு உறுப்பினராக இணைந்துகொள்ளவுள்ளார்.

## நிதி நன்கொடை...

கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் 15,89,000 ரூபாவையும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கிண்ணியா கிளை 53,00,000 ரூபாவையும், கல்முனை வலயக் கல்வி அலுவலகம் 31,28,500 ரூபாவையும், Sports First Foundation 3,00,000 ரூபாவையும் சிறுவர் நிதியத்துக்கு நன்கொடையாக வழங்கின. முதற்கட்டமாக இந்த ஆண்டு இப்தார் நிகழ்வை நடத்துவதற்கு அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் ஒதுக்கிய நிதியில் இருந்து கிடைத்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் குழு மூலம் பலஸ்தீன அரசாங்கத்திடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கையளித்தார்.

அத்துடன், "Children of Gaza Fund" நிதியத்துக்கு பங்களிக்குமாறு ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கமைய, அந்த நிதியத்துக்கு பெருமளவான நிதி கிடைத்துள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் இந்நிதி உத்தியோகபூர்வமாக பலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது. நன்கொடையாளர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிவரை மாத்திரமே இந்த நிதியத்துக்கு தொடர்ந்து பங்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் நன்கொடைகளை வழங்க விரும்புவர்கள் இருப்பின், அந்த நன்கொடைகளை 30ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை வங்கியின் (7010) தப்ரோபன் கிளையில் (747) உள்ள கணக்கு இலக்கமான 7040016க்கு வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் அது தொடர்பான பற்றுச்சீட்டை 077 9730396 என்ற எண்ணுக்கு WhatsApp ஊடாக அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## தெரிவுக்குழு அமைத்து...

தொடர்பில் தெரிவுக்குழு அமைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். தமக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு இன்னும் வழங்கப்படாத நிலையில் இரண்டு நீதிபதிகள் அதற்கான தீர்ப்பை எழுதியிருப்பதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கின்றார் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், இது பாரிய சிறப்புரிமை மீறல் என்றும் அத்துடன் சட்டத்துறையில் தலையீடு செய்யப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுவதாகவும் குறிப்பிட்டார்.

## அநுரகுமார திஸாநாயக்க...

சுவீடனில் இன்றையதினம் (27) நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பல்வேறு சிநேகபூர்வ சந்திப்புகளிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கல்வியியற் கல்லூரிகளுக்கு...

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 23,005 பேரை பணிக்கு அமர்த்தப்படும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## மாலைதீவுஇலங்கைக்கிடையில்...

சேவைகளுக்கு மேலதிகமாக 02 பெரிய A330 விமானங்கள் ஒவ்வொரு வாரமும் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு மாலேயிலிருந்து கட்டுநாயக்கவுக்கு வருகை தரும்.

இந்த விமான சேவையின் முதல் விமானமான "Moldavian Air" நிறுவனத்தின் Q2940 விமானம் நேற்று முன்தினம் (25) இரவு 9.30 மணியளவில் 157 பயணிகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

## GCE O/L விடைத்தாள்...

என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வழமையாக உள்ளதை விட இம்முறை மீள் பரிசீலனைக்காக இரண்டு மடங்கு பரீட்சை விடைத்தாள் தொகை கிடைத்துள்ள நிலையில் அதற்கான நடவடிக்கைகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் அதனை வெளியிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை எதிர்வரும் மே மாதம் இரண்டாவது வாரத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு முன்னராக மீள் பரிசீலனை முடிவுகள் வெளியிடப்படும் என குறிப்பிட்ட அவர், அது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் தமக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## அனைத்துக் கட்சிகள் உள்ளடக்கிய...

விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு தகவல்கள் தொடர்பாக செயற்பட அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கட்சியில் மீள இணைக்க...

மஹிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க ஆகியோர் அங்கம் வகிப்பதுடன், குழுவினருக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கான பொறுப்பு முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இணையத்தளத்தில் பதிவேற்றம்...

வெளியிட்ட 10 சம்பவங்கள் பதிவாகியதுடன், கூகுள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 3 பேரை கைது செய்துள்ளதாகவும், பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நியாயமான தீர்வை...

பதவிகளையும் துறக்கத் தயாராகவுள்ளதாக வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவித்தார். சம்பளம் அதிகரிக்கப்படா விட்டால் மக்களுடன் வீதியில் இறங்கி போராடி உரிமையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி நியாயமான தீர்வை பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான பேச்சுவார்த்தை இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்துள்ளது.

முதலாளிமார் சம்மேளனத்தினர் பேச்சுவார்த்தையை மீண்டும் புறக்கணித்துள்ளனர். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சம்பள உயர்வு இடம்பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதும் இம்முறை மூன்று வருடங்கள் கடந்தும் அது இடம்பெறவில்லை.

எவ்வாறாயினும் பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஜனாதிபதியுடனும் தொழில் அமைச்சருடனும் கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

அதற்கிணங்க தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி பெருந்தோட்ட மக்களுக்கு நியாயமான சம்பள உயர்வை அரசாங்கம் சட்ட ரீதியாக அறிவிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

மே முதலாம் திகதி சம்பள உயர்வுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் பாராளுமன்ற பதவி உள்ளிட்ட பட்டம் பதவிகள் எமக்குத் தேவையில்லை. அனைத்தையும் கைவிட்டு எமது மக்களுடன் வீதியிலிறங்கி சம்பள உயர்வுக்காக போராடி அதனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

ஒரு இலட்சத்து 43ஆயிரம் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தையே நாம் கேட்கின்றோம். அதனால் ஜனாதிபதி மலையக பெருந்தோட்ட மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக அந்த மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும் எமக்குள்ளது.

சம்பள உயர்வை வர்த்தமானியில் வெளியிட்டு சட்டபூர்வமாக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

தொழிலாளர்கள் மீது மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று நாம் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கின்றோம்" எனத் தெரிவித்தார்.

## ஐரோப்பாவுக்கு... (03ஆம் பக்க தொடர்ச்சி)

இந்தச் சிறுவர்கள் பெற்றோரிடமிருந்து பெற்றுகொள்ளப்பட்ட பின்னர், அவர்களை மலேஷியாவுக்கு அழைத்துச் செல்வதாகவும் அதன்பின்னர் மலேஷியாவில் அவர்களை மலேஷிய பிள்ளைகளாக பதிவு செய்வதற்கான தேவையான ஆவணங்களைத் தயாரித்து, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துக்கு அழைத்துச்சென்று ஆட்கடத்தலில் ஈடுபட வைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஆட்கடத்தல் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாரென அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உலகின் சிறந்த நாடுகள் பட்டியலில்...

இடத்தை தாய்லாந்து பிடித்துள்ளது. புதிய இடங்களை ஆராய்வது மற்றும் புதிய நபர்களை சந்திப்பதில் யாருக்குதான் பிடிக்காது என்ற வகையில் CEO WORLD சஞ்சிகை இப்பட்டியலை தயாரித்துள்ளது.

## சொத்துக்களை மீட்க...

சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கமைய 2024ஆம் ஆண்டாகும் போது சொத்துக்களை அறவீடு செய்தல் தொடர்பான முழுமையான சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய குற்றச்செயல்களால் ஈட்டிய சொத்துகள் தொடர்பான சட்டத்துக்கு தேவையான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நடவடிக்கை முறைகளை தயாரிப்பதற்காக 2023 மார்ச் மாதம் நீதித் துறையின் நிபுணர்களுடனான குழுவொன்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் நியமிக்கப்பட்டது. இக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் குற்றச்செயல்களால் ஈட்டிய சொத்துகள் தொடர்பான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி மற்றும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த இந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உத்தேச சட்டம் தொடர்பில் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று கண்டியில் கருத்து தெரிவித்த போது,

"இலஞ்சம், ஊழல், மோசடியூடாக பெறப்பட்ட சொத்துக்கள் எவரிடமேனும் இருப்பின் அதனை அரசுடமையாக்குவதற்கு ஏதுவாக அல்லது பறிமுதல் செய்ய தேவையான சட்டங்களை கொண்டு வருவதற்கான யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக தெரிவித்தார்.

இதற்கு நேற்று முன்தினம் (25) அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாகவும், அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கண்டியில் நேற்று (26) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், 25 ஆண்டுகளாக கொண்டு வரப்படாத பல மசோதாக்களை கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்ற முடிந்ததாகவும் அவர் கூறினார். அமைச்சரவையில் கலந்துரையாடி இணக்கப்பாட்டின் பின்னர் சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இந்திய மற்றும் ரஷ்ய...

குழுவின் விதந்துரைக்கமைய மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை இந்தியாவின் M/S Shaurya Aeronautics (Pvt) Ltd இற்கும் ரஷ்யாவின் Airports of Regions Management Company க்கோ அல்லது அதனுடன் இணைந்த தொழில் முயற்சியாளர்களுக்கு 30 வருடகாலத்துக்கு ஒப்படைக்கவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.


துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மத்தள விமான நிலையத்தின் வசதிகளைப் பயன்படுத்துவதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களிடமிருந்து விருப்புக் கோரல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த வருடம் (2023) ஜனவரி மாதம் 09ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, விருப்புக் கோரல்கள் பெறப்பட்டுள்ளதுடன், 05 நிறுவனங்கள் விருப்புக் கோரல்களைச் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் பொருளாதாரம்...

வங்கிக்கான புதிய சட்டத்துக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது அறிக்கை இதுவாகும்.

இந்த அறிக்கைக்கு அமைவாக ஆண்டுக்கான பொருளாதார விளக்கவுரை மூன்று அத்தியாயங்களிலும் மத்திய வங்கியின் நிதி அறிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் அறிக்கை ஐந்து பகுதிகளையும் கொண்டதாக அமைந்துள்ளன.2023 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தின் செயற்பாடுகள் படிப்படியாக மீண்டு வருவதை வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான புதிய கட்டடம் ஆளுநரால் திறந்து வைப்பு!







கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களின் நலன்கருதி 241 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் கிழக்கு மாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தமது பணிகளை சரியாக முன்னெடுக்க தங்களுக்கு போதுமான இடவசதிகளும் தளபாட வசதிகளும் இல்லையென நீண்டகாலமாக அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்துவந்தனர். எனினும் புதிய கட்டடத்தொகுதி பொருளாதார நெருக்கடியால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து புதிய கட்டடத்தை நிர்மாணித்து தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் பலரும் கோரிக்கை முன்வைத்தனர்.

அதற்கமைய ஆளுநர் செந்தில் தொண்டமானின் 241 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்கள் எவ்வித இன்னல்களுமின்றி தங்களது கடமைகளை திறம்பட செய்ய அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடத்தொகுதி ஆளுநரால் நேற்று திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டதுடன், அரச உத்தியோகத்தர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்கள் வேகமாக மக்கள் பணியை முன்னெடுக்க கட்டடத்தை நிர்மாணித்து கொடுத்த ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு நன்றிகளையும்,வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில்

# விஷ பாம்புகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் விஷ பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக பலர் பாம்பு கடிக்கு இலக்காகி வருகின்றனர்.

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துக்கள் வசிப்பிடங்களை விட்டு குளிர்ந்த பிரதேசங்களை நோக்கி நகர்ந்து செல்கின்றன. இவ்வாறு நகரும் பாம்புகள், விஷ ஜந்துக்கள் மக்கள் குடியிருக்கும் வீடுகள் அதனை அண்டிய பகுதிகள், தோட்டங்கள் ஆகியவற்றில் உள்நுழைந்து மறைந்து வாழ்கின்றன. இதனால் பொதுமக்கள் விஷ ஜந்துக்களால் தீண்டப்பட்டுவருவதோடு உயிரிழக்கும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அதிகளவில் இரவு வேளையில் பாம்புகள் இரைதேடி நடமாடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் சிறுவர்கள், முதியோர்கள் பாம்பு கடிக்கு இலக்காகி வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் வசிக்கும் மக்களே விஷ ஜந்துக்களின் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். பொதுமக்கள் தங்களது வீடுகளை அண்டிய பகுதிகளை அடிக்கடி கண்காணித்து சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவைதவிர பாம்புகடிக்கு இலக்கானவர்களுக்கு செய்ய வேண்டிய முதலுதவி பற்றி அறிந்திருப்பதுடன் கடிபட்டவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பிரதேச சுகாதார பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# 24 வருட கல்விச் சேவையிலிருந்து ஆசிரியை நந்தினி ஓய்வு





( காரைதீவு குறுப் நிருபர்)

காரைதீவைச் சேர்ந்த திருமதி ஜெயகோபன் நந்தினி தனது 60 வது வயதில் நேற்று ஓய்வுபெற்றார்.

அவர் இறுதியாக கற்பித்த நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் நேற்று (26) வெள்ளிக்கிழமை பிரியாவிடை நிகழ்வு நடாத்தப்பட்டது.

2000ம் ஆண்டு தொடங்கிய அவரது ஆசிரியர் சேவை 2024 உடன் நிறைவு பெற்றது.

2000 2008 வரை விபுலானந்த மத்திய கல்லூரி காரைதீவு 2009 2019 வரை அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயம் . இறுதியாக 2020 2024 வரை: இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயத்தில் நேற்று வரை சேவையாற்றினார்.

நிகழ்வில் அவரது குடும்பமும் கலந்துகொண்டது.

தன்னுடைய இந்நிகழ்வை மேலும் சிறப்பித்து பிரியாவிடை நிகழ்வை அளித்த சகோதர பாடசாலை இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலய அதிபர் ஆசிரிய மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகள் தெரிவித்தார்.

## அரச அதிகாரிகளுக்கான மந்தபோசனை தொடர்பான விழிப்புணர்வு

(தம்பலகாமம் குறுப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட அரச அதிகாரிகளுக்கான மந்தபோசனை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வானது Scalng up Nutrition peoples Forum ன் நிதிபங்களிப்பிலும் சக்தி மகளிர் அமைப்பின் மூலமாகவும் நடைபெற்றது.மந்தபோசனை,உணவு பழக்கவழக்கங்கள்,கர்ப்பிணி தாய்மார்களின் ஆரோக்கியமான நிலை உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. இந்நிகழ்வில் வளவாளராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தாய்சேய் நல மருத்துவ அதிகாரி வைத்தியர் ஏ.எச்.சமீம் கலந்து கொண்டார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள்,கல்வி அதிகாரிகள்,வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவு தின நிகழ்வுகள்







(மட்டக்களப்பு விசேட நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் எஸ்ஜே.வி. செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவு தின நிகழ்வுகள் மட்டக்களப்பு லேக் வீதியில் தந்தை செல்வாவின் சிலை அமைந்துள்ள வளாகத்தில் நேற்று (26) நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு அதன் தலைவர் எஸ். சோபனன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு 47 நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் ஆகியோர் நினைவுரையாற்றினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் மா.உதயகுமார் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் குருதி பற்றாக்குறை

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை உட்பட அம்பாறை மாவட்டத்திலும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளிலும் நோயாளர்களுக்குத் தேவையான இரத்தம் மிகவும் தட்டுப்பாடாகவுள்ளது.

அதனடிப்படையில், இரத்ததானம் செய்து பிறரின் உயிர்களைப் பாதுகாக்கும் இப்பணியில் இணையவுள்ள ஆண் பெண் இருபாலரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் தினந்தோறும்காலை8மணிமுதல்மாலை 4 மணி வரை இரத்ததானம் செய்ய முடியும் என்று வைத்தியசாலை இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

இரத்த தானம் செய்ய விரும்புவோர் நோயற்றவராகவும், முறையான உணவினை உட்கொண்டவராகவும் இருத்தல் அவசியமாகும் என்றும் மேலும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் ரயில் நிலைய சிற்றுண்டிச்சாலை

(ஒலுவில் விசேட நிருபர்)

மட்டக்களப்பு ரயில் நிலையத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் சிற்றுண்டிச்சாலையில் உணவுப்பண்டங்களை பெற்று உட்கார்ந்து உண்பதற்கு இருக்கைகள் இல்லாமையினால் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுதொடர்பாக சிற்றுண்டிச்சாலை நடத்துனரிடம் வினவிய போது, ரயில் திணைக்களத்திற்கு மாதாந்தம் வாடகைப்பணம் செலுத்தி வருகின்றோம். பலதடவை இதற்குரிய தளபாட வசதிகளையும் வழங்குமாறு கோரியும் இதுவரை எந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை.

இரவு நேரத்தில் ரயில் சிற்றூண்டிச்சாலை மூடப்பட்டுள்ளதாகவும் பிரயாணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புகையிரதத்திலுள்ள சிற்றூண்டிச் சாலை மூடப்பட்டுள்ளதால் பிரயாணிகளும் அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்களும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து கொழும்புக்கு நாளாந்தம் காலை, மாலை, இரவு நேரங்களில் மூன்று நீண்ட தூர ரயில் சேவை இடம்பெற்று வருகின்றது.

பொத்துவில், அம்பாறை, லகுகல, பாணாமை, அக்கரைப்பற்று ஆகிய தூர இடங்களிலிருந்து பிரயாணிகள் நாளாந்தம் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு உட்பட தூரப் பிரதேசங்களுக்கு பயணம் செய்கின்றனர்.

# நாளை சிட்னியில் சித்திரைத்திருநாள்

( காரைதீவு குறுப் நிருபர் )

காரைதீவு அவுஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் (AusKar) நடத்தும் சித்திரைத்திருநாள் பெருவிழா நாளை (28) ஞாயிற்றுக்கிழமை சிட்னி லிட்டன் ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அவுஸ்திரேலியா வாழும் காரைதீவு பெருமக்கள் அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறவிருப்பதாக அதன் செயலாளர் திருச்செல்வம் லாவண்யன் தெரிவித்தார்.

# காரைதீவில் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு



(காரைதீவு குறுப் நிருபர்)



காரைதீவில் நடப்பாண்டின் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் 41வது வருட சித்திரை புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கழகத் தலைவர் வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் க.பொ.த சாதாரண தரத்தில் 9 ஏ பெற்ற மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்திப் பெற்ற மாணவர்கள் 29 பேர் பெற்றோர்கள் முன்னிலையில் சான்றோரால் பாராட்டப்பட்டனர்.

பிரதம அதிதியான விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன்

ஏனைய அதிதிகளான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவு பிரதேச செயலாளர்

சிவ. ஜெகராஜன் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் கழக போசகர்களான வே.இராஜேந்திரன், வே.த.சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகளும் கலந்து கௌரவித்தனர்.

## முந்திரி மரக்கன்றுகள் வழங்கிவைப்பு



தோப்பூர் குறுப் நிருபர்

மூதூர் YMMA கிளையின் ஏற்பாட்டில் City Garden அமைப்பின் திருகோணமலை மாவட்டத்தின் இணைப்பாளர் அஷ்ஷேக் சித்தீக் தலைமையில் அறபா நகரில் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு முந்திரி மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் YMMA கிளையின் தலைவர் ஜனாப் ஜிஹாத் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் கலந்துகொண்டதோடு ஊர்ப்பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# சம்மாந்துறை பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் தாஸீம் ஓய்வு

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தராக கடந்த 2013ம் ஆண்டு தொடக்கம் கடமை புரிந்து வந்த எம்.எல் தாஸீம் தனது 34வருடகால அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவருக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிராம சேவை உத்தியோகத்தர் தரம் 01 சேர்ந்த இவர் 1964ம் ஆண்டு 04ம் மாதம் 25ம் திகதி சுலைமாலெப்பை லைலத்தும்மா மற்றும் அலியார் மீராலெப்பை ஆகியோருக்கு மகனாக சம்மாந்துறையில் பிறந்தார். இவர் தனது ஆரம்ப கல்வியை சம்மாந்துறை அல் மர்ஜான் மத்திய கல்லூரியிலும்,பின்னர் தனது இடை நிலைக்கல்வியை சம்மாந்துறை மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றார்.

இவர் 1990ம் ஆண்டு 12ம் மாதம் 03ம் திகதி நில அளவை திணைக்களத்தில் பட வரைவாளராக சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றினார்.பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகராக கடமையாற்றினார்.அதன் பின்னர் 1999ம் ஆண்டு 10ம் மாதம் 04ம் திகதி கிராம சேவகர் பரீட்சையில் சித்தியடைந்து கிராம சேவகராக சம்மாந்துறை பிரதேச செயலகத்தல் கடமையாற்றியதோடு 2013ம் ஆண்டு 6 ம் மாதம் பதில் நிர்வாக கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

திருகோணமலை

# கோட்டக் கல்விப்பணிப்பாளராக சண்முகநாயகம் நியமனம்!



திருகோணமலை வலயத்தின் திருகோணமலை கோட்டக் கல்வி பணிப்பாளராக செந்தில்வடிவேல் சண்முகநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை இந்து கல்லூரியில் பிரதி அதிபராக இருந்த இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தரத்தைச் சேர்ந்த சண்முகநாயகம் நேற்று முன்தினம் முதல் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலைவலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி அவருக்கான நியமனக்கடிதத்தை கையளித்தார் .

36 வருட கல்வி சேவை அனுபவத்தைக் கொண்ட சண்முகநாயகம் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் திருகோணமலை இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நீண்ட கால சேவையை ஆற்றியவராவார். எதிர்வரும் 2025 மார்ச் மாதத்தில் ஓய்வு பெறும் அவர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையின் 1991/92 விஞ்ஞானத்துறையில் பயிற்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com

# கலா பொல 2024 – இலங்கை ஓவிய கலையின் மகத்தான கொண்டாட்டம்



இலங்கையில் வருடாந்தம் இடம்பெற்றுவருகின்ற திறந்தவெளி ஓவியச் சந்தையான கலா பொல 2024, 2024 அண்மையில் கொழும்பு 7, ஆனந்த குமாரசுவாமி வீதியோரத்தில் இடம்பெற்றது. இது ஓவியர்கள் மற்றும் பார்வையாளர்கள் என இரு தரப்பினருக்கும் வெற்றியை ஈட்டித்தந்து, ஒப்பந்த அடிப்படையிலான ஓவியப்படைப்புக்கள் நீங்கலாக, அண்ணளவாக ரூபா 51 மில்லியன் விற்பனையைத் தோற்றுவித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

31ஆவது ஆண்டை எட்டியுள்ள கலா பொல நிகழ்வானது, ஓவியர்களும், சிற்பிகளும் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து, கொள்வனவாளர்கள், துறைசார் வல்லுனர்கள், மற்றும் கலைஞர்கள் சமூகம் ஆகியோருடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள இடமளித்து வருகின்ற இலங்கையின் மிகப் பாரிய மற்றும் மிக நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற கலை மேடையாகும். ஜோர்ஜ் கீற் நிதியம் (George Keyt Foundation GKF) மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமம் ஆகியவற்றுடனான நீண்டகால ஒத்துழைப்புடன், இந்நிகழ்வு பலத்த வரவேற்பைப் பெற்றிருந்ததுடன், 368 கலைஞர்களையும், கிட்டத்தட்ட 38,000 பார்வையாளர்களையும் (நிகழ்வு இடத்திற்கு வருகை தந்தவர்கள் மற்றும் வருகை தந்த வாகனங்கள் அடங்கலாக) ஈர்த்திருந்தது.

இந்த உத்தியோகபூர்வ வைபவத்தின் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய துாதுவர் மேன்மைதங்கிய சந்தோஷ் ஜா கலந்து சிறப்பித்ததுடன், ஜோர்ஜ் கீற் நிதியத்தின் (GKF) தலைவர் மாலக தல்வத்த, GKF அறக்கட்டளையின் அங்கத்தவர்கள், ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிறிஷான் பாலேந்திரா, மற்றும் இக்குழுமத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

# வணிக அடித்தளத்தை இலங்கை, பங்களாதேஷ் கம்போடியாவில் விரிவுபடுத்தும் Kaspersky

உலகளாவிய இணையப் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தனியுரிமை நிறுவனமான Kaspersky, இலங்கை, கம்போடியா மற்றும் பங்களாதேஷ் உட்பட ஆசிய பசிபிக்கிலுள்ள (APAC) புதிய பிரதேசங்களில் அதன் விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த மூலோபாய நடவடிக்கையானது, பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் முழுவதும், குறிப்பாக நிறுவன இணையப் பாதுகாப்பு சந்தையில் டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நிறுவனத்தின் பணியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை இது குறிக்கிறது.

இணைய அச்சுறுத்தல்கள் உலகளவில் தொடர்ந்து உருவாகி, பெருகி வருவதால், Kaspersky அதன் முழுமையான இணையப் பாதுகாப்பு தீர்வுகள் சேவைகளை APAC இல் வளர்ந்து வரும் சந்தைகளுக்கு விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தைக் கொண்டுள்ளது.

புத்தாக்கமான தீர்வுகள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதில் நிரூபிக்கப்பட்ட சாதனையுடன், கம்போடியா, இலங்கை மற்றும் பங்களாதேஷில் தனிநபர்கள், அரசாங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இணைய பாதுகாப்பு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள நிறுவனம் தயாராக உள்ளது.

"இலங்கை, கம்போடியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் எங்களது விரிவாக்கமானது, அதிகரித்து வரும் இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஆசியா பசிபிக்கின் பரந்த Cybersphereஐப் பாதுகாப்பதில் எங்களின் உறுதியான அர்ப்பணிப்பை இது காட்டுகிறது" என Kasperskyஇன் ஆசியா பசிபிக் முகாமைத்துவப் பணிப்பாளர் Adrian Hia கூறினார்.

"எங்கள் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறைமுன்னணி நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம், இந்த பிராந்தியங்களில் உள்ள தனியார் மற்றும் பொது நிறுவனங்களுக்கு அவர்களின் தனிப்பட்ட, வணிகம் மற்றும் முக்கியமான மற்றும் தேசிய தரவைப் பாதுகாப்பதற்கான Cyber எதிர்ப்பு அணுகுமுறையை உருவாக்க உதவுவதில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்." என கூறினார்.

# பெண்களுக்கான ஒரு மாத வலுவூட்டல் பிரசாரத்தை நிறைவுசெய்த SDB வங்கி

பெண்களை வலுவூட்டலானது SDB வங்கியின் அதன் துவக்கம் முதலான வியாபாரத்திற்கான அணுகுமுறையின் மையமாக விளங்குவதுடன் அதனது நிறுவன சிந்தனாதளத்திலும் ஆழமாக வேரூன்றிய அம்சமாகவும் காணப்படுகின்றது. வங்கியின் வெற்றிகரமான இருமுக அணுகுமுறையானது நிறுவனத்திற்குள்ளிருந்து பெண்களை வலுப்படுத்தல் மற்றும் வெளியிலிருந்து பெண்களிற்கு ஆதரவளித்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இவ்வர்ப்பணிப்பானது சமத்துவம், பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கல் என்பவற்றிலான வங்கியின் விளம்பரப்படுத்தல்களில் சான்றாவதுடன் உயர் தலைமைத்துவ பதவிகளிலான குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தினையும் உள்ளடக்கியதான 48% பெண்களாகக் காணப்படும் அதனது ஊழியப்படையின் உள்ளடக்கத்திலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

தேசம் முழுவதிலுமான பெண்களை வலுவூட்டுவதற்கு அதனது பரந்த பயணத்துடனாக நிறுவனத்திற்குள்ளான பெண்களை அங்கீகரிப்பதற்கும் அஞ்சலி செலுத்துவதற்குமான அதனது முயற்சிகளை பிணைப்பதான, ஒரு தனித்துவமான இலத்திரனியல் ஊடக பிரச்சாரத்தினை மாதம் முழுவதிலுமாக செயற்படுத்தியுள்ளமையினால் மார்ச் மாதமானது SDB வங்கிக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமிக்கதாக விளங்கியது. இப்பிரச்சாரத்தின் ஊடாக, வீரமும் அர்ப்பணிப்பும் மிக்க கதைகளை பகிர்ந்தும், எதிர்ப்பின் பலமிக்க செய்தியை வழங்கியும் SDB வங்கியானது தங்களது நிலைகளிலான பெண்களது அளப்பரிய பங்களிப்புக்களை காட்சிப்படுத்தியிருந்தது.

# SGG App ஐ பயன்படுத்தி Samsung, UNDP 2030 நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கின்றன



COVID19 ஆனது இப் புவியில் வாழ்ந்து வரக்கூடிய எமது சமூகத்திற்கு முன்னொருபோதுமே நிகழ்ந்திராத மோசமான சவால்களைக் கொண்டு வந்துள்ளது. அது மட்டும் அல்லாது 2015 முதற்கொண்டு அடைந்து வந்த முன்னேற்றங்களையும் மிகவும் பாதித்துள்ளது. Samsung மற்றும் UNDP என்பன 2030 ற்கான நிகழ்ச்சி நிரலை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான பாதையில் தமது முழு கவனத்தையும் முடுக்கி விட்டுள்ளது. மேலும் அவை புதுமைகாண் கூட்டாண்மை பொறுப்புகளைத் திரட்டுவதோடு மட்டுமின்றி இப் புதிய சவால்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு கூட உலகளாவிய இலக்குகளின் சாதனைகளையும் கூட விரிவுபடுத்துகிறது.

2019 ஆம் ஆண்டில் Samsung மற்றும் UNDP கூட்டாண்மையானது ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து, UNDP ஆனது Samsung இன் தற்போதைய வளர்ச்சிப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் விழிப்புணர்வையும் மற்றும் நிதியையும் திரட்ட புதுமைகாண் தொழிநுட்பங்களையும் பயன்படுத்தியது. Samsung Global Goals (SGG) App ஆனது 2030 இற்கான நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் காட்டுவதில் தனித்துவமானது, ஏனெனில் இது நிதி உருவாக்கத்தினை மேற்கொள்ளும்போது உலகளாவிய ரீதியில் இலக்குகளை அடைவது தொடர்பாக மிகவும் எளிய வழிகளை வழங்குகிறது.

# நிலைபேறான எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்த யூனிலீவர், CEA, MEPA

*யூனிலீவர் ஸ்ரீ லங்கா அதன் பரந்த நிலைபேறான தன்மை நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக, உள்நாட்டு சந்தையில் விற்பனையாகும் அதன் பிளாஸ்டிக்கின் 100% இற்கு சமமான பிளாஸ்டிக்கை சேகரிப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. 4 மில்லியன் இலங்கையர்களுக்கு குடிநீரை வழங்கும் களனி கங்கையின் சுத்திகரிப்பு மற்றும் அதன் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான யூனிலீவர், CEA, MEPA ஆகியவற்றுக்கு இடையேயான அரச தனியார் பங்காளித்துவமானது முக்கிய உதவியாக அமையும். இது அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது.*

*யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அலி தாரிக் இது குறித்து தெரிவிக்கையில், "பிளாஸ்டிக்குகளுக்கு ஒரு வட்டப் பொருளாதாரத்தை உருவாக்கும் எமது முயற்சியில், கடந்த 2 வருடங்களில் நாம் விற்பனை செய்த எமது தயாரிப்புகள் மூலமான பிளாஸ்டிக் கொள்ளளவின் 100% இற்கும் அதிகமான பிளாஸ்டிக்கை நாம் மீள சேகரித்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம். அந்த வகையில் அதனைத் தொடர்ந்து நாம் மேற்கொள்ளவுள்ள, களனி ஆற்றை சுத்தப்படுத்தும் கூட்டாண்மையானது, 'பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கான விரிவான உற்பத்தியாளர் பொறுப்பு' எனும் தேசிய நிகழ்ச்சி நிரலை ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பை செயற்படுத்துகிறது. தூய்மையான களனி கங்கையானது, பாதுகாப்பான குடிநீரை வழங்குவதோடு மட்டுமன்றி, வாய்ப்புகளை உருவாக்கி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாவுக்கான செழிப்பான சூழலை மேம்படுத்தும்." என்றார்.*



*மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) தலைவர் வெனுர பெனாண்டோ, இது பற்றி கருத்து வெளியிடுகையில், "யூனிலீவர் போன்ற பெருநிறுவனங்கள், நீடித்த உறுதிப்பாடு மற்றும் கூட்டாண்மைகள் மூலம் தமது 'விரிவான உற்பத்தியாளர் பொறுப்புகளை' சரிவர நிறைவேற்ற முன்வருவதை நாம் காண்கின்றோம். யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்துடன் இணைந்து களனி கங்கையை தூய்மைப்படுத்தும் திட்டத்தை இந்த முயற்சி எடுத்துக்காட்டுகிறது.*

*சூழல் சவால்களை எதிர்கொள்வதில் அரச தனியார் கூட்டாண்மை முக்கிய பங்கு வகிப்பதோடு, இந்த முயற்சியானது, இரு துறைகளின் ஒருங்கிணைந்த நிபுணத்துவத்தை ஒரு நிலையான எதிர்காலத்திற்காக திறம்பட பயன்படுத்தும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்." என்றார்.*

*இந்த ஐந்து வருட திட்டமானது கங்கைக் கரை, அதனுடன் இணையும் கடற்கரைகள் மற்றும் கடற்பரப்புகளை தூய்மைப்படுத்தும் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.*

*உள்ளூராட்சி சபைகளின் ஒத்துழைப்புடன், பாடசாலை மாணவர்கள், குடியிருப்பாளர்கள், உள்ளூராட்சி அதிகாரசபை ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சமூக ஈடுபாடு மற்றும் பயிற்சி, மாசடைதல் மேலும் அதிகரிப்பதை தடுக்க மிதக்கும் தடுப்புகளை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்கள் மூலம் இந்த திட்டங்கள் யாவும் செயற்படுத்தப்படும்.*

*கடலோர சூழல் தொகுதிகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு, இந்த திட்டமானது ஆற்றின் வாயிலில் அதன் கவனத்தை செலுத்தும்.*

# அமானா வங்கியின் சுய வங்கி சேவை நிலையம் கெக்கிராவையில் திறப்பு

அமானா வங்கி தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையமொன்றை (SBC) கெ`கிவராவயில் திறந்துள்ளது. இலங்கை முழுவதிலும் வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளை இலகுவாக அணுகக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. இல. 15, ECD ஆர்கேட், தலாவ வீதி, கெக்கிராவை எனும் முகவரியில் இந்த புதிய சுய வங்கிச் சேவை நிலையம் அமைந்துள்ளது. அமானா வங்கியின் 62ஆவது வாடிக்கையாளர் அமைவிடப்பகுதியாக இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர், அனுராதபுர கிளை முகாமையாளர் சாந்த பெர்னான்டோ ஆகியோருடன், பிரதேசத்தின் வியாபார பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரத் தரப்பினர் மற்றும் பிரதேசவாசிகள் என பலரும் இந்த நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். கெக்கிராவை சுய வங்கிச் சேவை நிலையம் 24/7 நேரமும் பண மீளப்பெறுகை, பண வைப்பு மற்றும் காசோலை வைப்பு வசதியை வழங்கும்.



இந்த விரிவாக்கம் தொடர்பில் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "சுய வங்கிச் சேவை நிலையமொன்றை நிறுவியுள்ளதனூடாக கெக்கிராவை பகுதிக்கு எமது சேவையை நாம் விஸ்தரித்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அதனூடாக, அனைவருக்கும் சௌகரியமான வங்கியியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்துள்ளோம். சமூகங்களுக்கு சௌகரியம் மற்றும் மக்களுக்கு நட்பான நிதிச் சேவைகள் ஆகியவற்றை பெற்றுக் கொடுத்து வலுவூட்டுவது எனும் எமது நோக்கத்துக்கமைய இந்தத் திட்டம் அமைந்துள்ளது." என்றார்.

# LankaPay Technovation Awards நிகழ்வில் தங்க விருதை வென்ற DFCC வங்கி

டிஜிட்டல் புத்தாக்கத்தினூடாக அனைவருக்கும் நிதியியல் வாய்ப்பினை வழங்கும் வழிமுறைகளை மேம்படுத்துவதில் DFCC வங்கியின் மகத்தான முயற்சிகளுக்கான அங்கீகாரமாக அண்மையில் இடம்பெற்ற LankaPay Technovation Awards விருதுகள் நிகழ்வில், நிதியியல் உள்ளடக்கம் பிரிவு C இல் ஆண்டின் மிகச் சிறந்த நிதியியல் நிறுவனத்திற்காக (Financial Institution of the Year for Financial Inclusion) தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பு மிக்க பாராட்டுக்குப் புறம்பாக, பிரிவு B இல் ஆண்டின் மிகச் சிறந்த சாதாரண ஏடிஎம் செயலூக்கத்திற்கான சிறப்பு விருதையும் (Best Common ATM Enabler), DFCC வங்கி பெற்றுள்ளது. டிஜிட்டல் செயலூக்கத்தினூடாக அனைவருக்கும் நிதியியல் வாய்ப்புக்களை வழங்கி நிலைபேணத்தகு எதிர்காலத்தைச் செதுக்கி, 'அனைவருக்கும் ஏற்ற வங்கி' ஆகத் திகழ்வதில் DFCC வங்கியின் அர்ப்பணிப்பை



இந்த விருதுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இச்சாதனை குறித்து DFCC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா அவர்கள் கருத்து வெளியிடுகையில், "இந்த மதிப்பிற்குரிய விருதுகளுடன் கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் எமக்கு மிகுந்த கௌரவம் அளிக்கின்றது.

மிகவும் மதிப்பிற்குரிய இந்த மேடையில் எமக்கு கிடைக்கப்பெற்ற முதலாவது தங்க விருதாக இது அமைந்துள்ளதுடன், DFCC வங்கியை அனைவருக்கும் ஏற்ற ஒரு முதன்மையான நிதியியல் நிறுவனமாக நிலைநிறுத்துவதற்காக உழைக்கின்ற பல்வேறு நபர்கள் மற்றும் அணிகளின் ஓயாத அர்ப்பணிப்பிற்கு சான்று பகருகின்றது. சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் கூட, அவர்களுடைய அயராத முயற்சிகள் மூலமாக நிலையான வளர்ச்சியை நாம் எட்டியுள்ளோம். முக்கியமாக, எமது வாடிக்கையாளர்கள் மீது நாம் கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பு, முக்கியமான நிதியியல் சேவைகளை தங்குதடையின்றி அவர்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த அங்கீகாரத்தை எமக்கு வழங்கிய அமைப்பிற்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், எமது அணியின் உறுப்பினர்களின் மகத்தான பங்களிப்புக்களையும் பாராட்டுகின்றேன். மேலும், எமது விசுவாசம்மிக்க வாடிக்கையாளர்கள் DFCC வங்கிக்கு வழங்கும் ஓயாத ஆதரவிற்காக அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்," என்று குறிப்பிட்டார்.

# பணியாற்ற சிறந்த இடம் சான்றுப்படுத்தலை கொண்டாடும் Neptune Recyclers



பணியாற்ற சிறந்த இடம் எனும் சான்றிதழை பெற்றமை தொடர்பான அதன் உத்தியோகபூர்வ சான்றுப்படுத்தலை Neptune Recyclers நிறுவனம் பெருமையுடன் அறிவிபபதில் மகிழ்ச்சி அடைகின்றது. இது எமது அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் மதிப்புமிக்க பின்னூட்டலின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட ஒரு முக்கிய அங்கீகாரமாகும். இந்த சான்றிதழானது எமது நிறுவனத்திற்கு ஒரு மைல்கல்லை அடையாளப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தனிநபர்களை பணியாளர்களாக மட்டும் கருதுவதையும் தாண்டி, மதிப்புமிக்க பங்களிப்பாளர்களாகவும் மரியாதை மற்றும் வலுவூட்டப்பட்டவர்களாகவும் இருக்கும் ஒரு பணியிடத்தை அவர்களுக்கு நிறுவுவதற்கு நாம் கொண்டுள்ள எமது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இது வலுப்படுத்துகிறது.

இந்த சான்றளிப்பு செயன்முறையானது, Neptune Recyclers ஒரு பணியிடம் என்பதையும் கடந்தது என்பதற்கு சான்றாக அமைகிறது. இது ஒரு செழிப்புமிக்க சூழல், இங்கு தொழில் வல்லுநர்கள் வெறுமனே வேலை செய்வதோடு மட்டுமல்லாமல், மேம்படுத்தப்படுகின்றனர். இங்கு பணியில் திருப்தி மற்றும் பணி நோக்கத்தின் கலாசாரம் வளர்க்கப்படுகின்றது. நம்பகத்தன்மை, மரியாதை, நேர்மை, தோழமை, பெருமை ஆகிய ஐந்து முக்கிய பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்ட நுணுக்கமான மதிப்பீட்டின் அடிப்படையில், Neptune Recyclers தமது பணியிட விசேடத்துவத்தின் முழுமையான அர்ப்பணிப்பை நிரூபித்துள்ளது.

# ரூ. 568 பில்லியனுக்கும் அதிக பரிவர்த்தனைகளுக்கு அனுசரணை வழங்கி பணியாற்றிய மக்கள் வங்கி

*இலங்கையில் மிகப் பாரிய வாடிக்கையாளர் தளத்துடன், டிஜிட்டல் வங்கிச்சேவைப் புத்தாக்கத்தில் முன்னோடியான மக்கள் வங்கி, ஏப்ரல் 1 முதல் 15 வரையான புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் ரூபா 568 பில்லியனுக்கும் மேற்பட்ட தொகையுடன், 17 மில்லியனுக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கு அனுசரணையளித்துள்ளதை பெருமையுடன் அறிவித்துள்ளதுடன், நாட்டில் அன்றாட நிதியியல் செயல்பாடுகளில் அதன் முக்கிய வகிபாகத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது.*

*747 கிளைகள் மற்றும் சேவை மையங்கள், மிகவும் பிரபலமான டிஜிட்டல் வங்கிச்சேவை தளங்கள், மற்றும் 1,150 க்கும் மேற்பட்ட தனது விசாலமான வலையமைப்பின் அனுகூலத்துடன், மக்கள் தனது வாடிக்கையாளர்களுக்கு ஈடு இணையற்ற சௌகரியத்தையும், வசதியையும் வெற்றிகரமாக வழங்கியுள்ளது. இந்த விசாலமான உட்கட்டமைப்பானது, வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தி, நாடெங்கிலும் தனது சேவை கிடைக்கப்பெறுவதை விஸ்தரிப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.*

*வங்கியின் புத்தாக்கமான டிஜிட்டல் தளங்கள் இலங்கையில் டிஜிட்டல் வங்கிச் சேவைத் துறையில் புதிய தரஒப்பீட்டு நியமங்களை வங்கி நிலைநாட்டி வருகின்றது. நாட்டில் மிகவும் அதிக எண்ணிக்கையில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள வங்கிச் சேவை செயலியான Pநழிடந'ள றுயளந, 2 மில்லியனுக்கும் மேற்பட்ட இயங்குநிலை பயனர்களைக் கொண்டுள்ளதுடன், 50 க்கும் மேற்பட்ட வேறுபட்ட நிதியியல் பரிவர்த்தனைகளுக்கு டிஜிட்டல் வழிமுறை அணுகலை வழங்குகின்றது.*

*கிட்டத்தட்ட ரூபா 3.0 டிரில்லியன் திரட்டிய சொத்துக்களுடன் நாட்டில் இரண்டாவது பாரிய நிதியியல் சேவை வழங்குனராகத் திகழ்ந்து வருகின்ற மக்கள் வங்கி, தனது சந்தை ஸ்தானத்தை தொடர்ந்தும் வலுப்படுத்தி வருகின்றது. 14.7 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன், தற்போது நாட்டில் மிகப் பாரிய வாடிக்கையாளர் தளத்திற்கு தனது சேவைகளை வழங்கி வருகின்றது.*



# இலங்கை அபிவிருத்தி குழாத்தினர் அறிவிப்பு



உகண்டா அணிக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை அபிவிருத்தி குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் டி20 உலகக் கிண்ணத்தில் ஆடவுள்ள உகண்டா அணி அதற்காக பயிற்சி பெறும் நோக்கில் நேற்று (26) இலங்கை வந்தடைந்தது.

உகண்டா மற்றும் இலங்கை அபிவிருத்தி அணிகளுக்கு இடையிலான மூன்று டி20 போட்டிகளும் எதிர்வரும் ஏப்ரல் 28, 30 மற்றும் மே 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதற்கான இலங்கை அபிவிருத்தி அணிக்கு 23 வயது நிபுன் தனஞ்சய தலைவராக செயற்படவுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த தினுர களுபஹன், மல்ஷ தருபத்தி மற்றும் கருக சங்கேத் ஆகியோரும் இந்தக் குழாத்தில் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை அபிவிருத்தி குழாம்: நிபுன் தனஞ்சய (தலைவர்), கிரிஷான் சஞ்சுல, ஹசித்த போயகொட, சதுன் வீரக்கொடி, மொஹமட் ஷமாஸ், ரவிந்து பெர்னாண்டோ, ரனேஷ் சில்வா, டில்ஷான் அரம்பேபொல, தினுர களுபஹன, மல்ஷ தருபத்தி, தரிந்து ரத்னாயக்க, இசித்த விஜேசுந்தர, தனல் ஹேமானந்த, கருக சங்கேத், ஷிரான் பெர்னாண்டோ.

# ஓட்டமின்றி 7 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை



இந்தோனேசிய சுழற்பந்து வீராங்கனை ரொஹ்மாலியா, மங்கோலிய அணிக்கு எதிரான போட்டியில் ஓட்டம் இன்றி 7 விக்கெட்டுகளை வீழ்த்தி மகளிர் டி20 சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த பந்துவீச்சை பதிவு செய்துள்ளார்.

பாலியில் கடந்த புதன்கிழமை (24) நடைபெற்ற மங்கோலியாவுக்கு எதிரான 5ஆவது டி20 போட்டியில் 17 வயதான ரொஹ்மாலியா 3.2 ஓவர்களில் ஒரு ஓட்டத்தைக் கூட விட்டுக்கொடுக்காது 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதில் அவர் ஆறு வீராங்கனைகளை டக் அவுட் செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தோனேசிய அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களை பெற்ற நிலையில் மங்கோலிய அணி 24 ஓட்டங்களுக்கே சுருண்டது.

முன்னதாக 2021 இல் பிரான்ஸுக்கு எதிராக நெதர்லாந்து வேகப் பந்து வீராங்கனை பெடரிக் ஓவர்டிக் 3 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது.

## சர்வதேச செய்திகள்

# படையெடுப்பை நெருக்கும் இஸ்ரேல் ரபா நகரின் மீது சரமாரித் தாக்குதல்

## எகிப்து உயர்மட்ட தூதுக்குழு இஸ்ரேல் விரைவு



தெற்கு காசாவின் ரபா மீதான படையெடுப்புக்கான திட்டத்தை இஸ்ரேல் விரைவுபடுத்தி வரும் நிலையில் அந்த நகர் மீது தொடர்ச்சியாக செல் மற்றும் வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

தனது நாட்டு எல்லையில் அமைந்திருக்கும் ரபா மீதான படை நடவடிக்கை பேரழிவை ஏற்படுத்தும் என்று அஞ்சும் எகிப்து புதிய போர் நிறுத்த முயற்சியாக உயர் பட்ட தூதுக்குழு ஒன்றை இஸ்ரேலுக்கு அனுப்பியுள்ளது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா மீதான படையெடுப்புக்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் வலுத்திருந்தபோதும் அங்கு தரைவழி நடவடிக்கைக்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

இதற்கான சமிக்ஞையாகவே அங்கு தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. ரபா நகர கடற்கரையில் வேலை செய்துகொண்டிருந்த மீனவர் ஒருவர், இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஒருவர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

காசா கடற்பகுதியில் கடுமையான கட்டுப்பாடுகளை செயற்படுத்தி வரும் இஸ்ரேலினால் அங்குள்ள மீனவர்கள் தொடர்ந்து தொந்தரவுக்கு முகம்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 'நட்சரிட் இடைவழியில்' செயற்படும் இஸ்ரேலிய படைகளை இலக்கு வைத்து பலஸ்தீன போராளிகள் கடந்த வியாழனன்று (25) மோட்டார் மற்றும் மேம்படுத்தப்பட்ட வெடிபொருட்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாக போர் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ரபா மீதான படை நடவடிக்கைக்கு இஸ்ரேலிய படையினர் வெளிப்படையாக தயாராகி வரும் நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ரபா படையெடுப்பு தொடர்பில் சந்தேகங்கள் வலுத்து வரும் நிலையில் இஸ்ரேல் இரு மேலதிக படைப்பிரிவுகளை அழைத்திருப்பதோடு, ரபாவுக்கு அருகில் கான் யூனிஸ் நகரில் பாரிய அளவில் வரிசையாக கூடாரங்கள் அமைக்கப்பட்டிருப்பது செய்மதி படங்கள் காட்டுகின்றன.

ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதற்கும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 133 பணயக்கைதிகளை விடுவிப்பதற்கும் ரபா மீதான படை நடவடிக்கை அவசியம் என்று இஸ்ரேல் கூறி வருகிறது.

எனினும் காசா விளிம்பில் உள்ள ரபா நகர் இடம்பெயர்ந்த மக்களின் கடைசி அடைக்கலமாக இருப்பதோடு அங்கிருந்து அவர்கள் எங்கும் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். அவர்களை வெளியேற்றுவதற்கு இஸ்ரேல் திட்டமிட்டபோதும் அது நடைமுறை சாத்தியமற்றது என்று ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காசாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் வடக்கில் காசா நகரில் உள்ள அல் ஷபா குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலை அடுத்து ஒரு குழந்தை மற்றும் பெண் ஒருவர் உட்பட மூவரின் உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் பாதிக்கப்பட்டவர்கள் காசா நகரில் இயங்கும் கடைசி மருத்துவமனையான அல் அஹ்லி அரபு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். கடந்த மாதம் இஸ்ரேல் இராணுவம் நடத்திய பாரிய சுற்றிவளைப்பில் அங்குள்ள மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனை அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரபா மீதான இஸ்ரேலின் படை நடவடிக்கை பேரழிவையும் பிராந்தியத்தில் ஸ்திரமற்ற நிலையையும் ஏற்படுத்தும் என்று எச்சரித்திருக்கும் எகிப்து, உயர்மட்ட தூதுக்குழு ஒன்றை இஸ்ரேலுக்கு அனுப்பியுள்ளது.

இழுபறி நீடிக்கும் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் புதிய முயற்சியாக எகிப்து உளவுப் பிரிவு தலைவர் அப்பாஸ் கமால் தலைமையிலான குழு ஒன்றே இஸ்ரேல் விரைந்துள்ளது.

இதில் ஹமாஸ் பிடியில் இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் வடக்கு காசாவில் இருந்து வெளியேறிய கணிசமான எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப அனுமதிப்பது தொடர்பிலேயே பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவிருப்பதாக எகிப்து அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

எனினும் முழுமையான போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேலிய படை வாபஸ் பெறும் தமது நிபந்தனையில் இருந்து பின்வாங்கப்போதில்லை என்று ஹமாஸ் கூறி வருவதோடு அந்த நிபந்தனைகளை இஸ்ரேல் மறுத்து வருகிறது. ஹமாஸ் முழுமையாக தோற்கடிக்கப்படுவது மற்றும் அதன்பின் காசாவில் பாதுகாப்பு நிலைப்படுத்தப்படும் வரை போர் தொடரும் என்று இஸ்ரேல் கூறுகிறது.

ரபாவையொட்டி இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில், எகிப்துடனான காசா எல்லையில் இஸ்ரேலிய துருப்புகள் குவிக்கப்படுவதற்கு அதிருப்தியை வெளியிடவும் இஸ்ரேல் சென்றிருக்கு எகிப்து தூதுக் குழுவினர் திட்டமிட்டிருப்பதாக நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

ரபாவில் உள்ள பலஸ்தீனர்கள் எல்லை கடந்து எகிப்துக்குள் வர அனுமதிக்கப்போதில்லை என்று எகிப்து ஏற்கனவே உறுதியாக குறிப்பிட்டுள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு எகிப்துடன் கட்டார் மற்றும் அமெரிக்கா மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் ரபா மீதான படையெடுப்பு இந்த பேச்சுவார்த்தையை முறிக்கும் என்று ஹமாஸ் அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'ரபாவில் இஸ்ரேல் எதிர்பார்த்ததை அடையாது' என்று மூத்த ஹமாஸ் அதிகாரியான காசி ஹமாத் தெரிவித்தார். ஏழு மாத போரில் ஹமாஸை ஒழிப்பது அல்லது பணயக்கைதிகளை விடுவிப்பது ஆகிய எந்த இலக்கையும் இஸ்ரேல் அடையவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

காசா போர் இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆதரவு குழுக்களுக்கு இடையில் மோதலை தூண்டி இருக்கும் சூழலில் அது பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வரும் நிலையில் ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவன் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியது.

கபர் சுபா மலைப் பகுதியில் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகளை பயன்படுத்தி மேற்கொண்ட சிக்கலான அதிரடி தாக்குதலில் இரு இஸ்ரேலிய வாகனங்களை அழித்ததாக ஹிஸ்புல்லா குறிப்பிட்டது.

இது தொடர்பில் இஸ்ரேல் நேரடியாக பதில் அளிக்கவில்லை.

தெற்கு லெபனானில் ஷெபா கிராமத்தைச் சூழ ஹிஸ்புல்லா இலக்குகளை இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்கியதாக அது குறிப்பிட்டது. இதில் பல வீடுகளும் சேதமடைந்திருப்பதாக லெபனான் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா மோதல்களில் லெபனானில் குறைந்தது 380 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு இதில் 252 ஹிஸ்புல்லா போராளிகளும் அடங்குவதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இந்தக் காலப்பகுதியில் 11 இஸ்ரேலிய படையினர் மற்றும் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லைகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## காசா போருக்கு எதிரான

# அமெரிக்க பல்கலைக்கழக ஆர்ப்பாட்டங்கள் அதிகரிப்பு



அமெரிக்க பல்கலைக்கழகங்களில் காசா போருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் பரவி வரும் நிலையில் முன்னணி கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஒன்று தனது பட்டமளிப்பு விழாவை ரத்துச் செய்துள்ளது.

புதிய பாதுகாப்பு நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள தெற்கு கலிபோர்னிய பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக முகாமிட்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்களை கலைப்பதற்கு பல்கலைக்கழகங்களுக்கு பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர். நியூயோர்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் வெடித்த நிலையில் அங்குள்ள ஆர்ப்பாட்ட முகாம்களை கலைக்க கடந்த வியாழக்கிழமை வரை கெடு விதிக்கப்பட்டபோதும் அந்த கால அவகாசம் தற்போது கைவிடப்பட்டுள்ளது. அட்லாண்டாவின் எமோரி பல்கலைக்கழகத்தில் வெளியேற மறுத்த 28 ஆர்ப்பாட்டக்காரர்கள் வியாழக்கிழமை (25) கைது செய்யப்பட்டனர்.

லொஸ் ஏஞ்சலிஸ், போஸ்டன், ஆஸ்டின் ஆகிய நகரங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் கடந்த இரண்டு நாட்களில் இருநூற்றுக்கும் அதிகமானோர் கைதாயினர்.

இதுவரை மொத்தம் ஐந்நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் கூறியது.

பல்கலைக்கழகங்களுக்கு இனப்படுகொலையில் இருந்து விலகி இருக்கும்படியும் காசா போரில் இஸ்ரேலுக்கு ஆதரவான ஆயுத உற்பத்தி மற்றும் ஏனைய தொழில் துறையுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் கல்லூரிகளில் முதலீடு செய்வதை நிறுத்தும்படியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

# உயிரிழந்த தாயிடமிருந்து மீட்ட குழந்தையும் மரணம்



தெற்கு காசாவில் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்ட தாயின் வயிற்றில் இருந்து மீட்கப்பட்ட குழந்தை உயிரிழந்துள்ளது.

சப்ரீன் அல் சகானி என்ற அந்த பெண் குழந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் ரபா மருத்துமனை ஒன்றில் அறுவைச் சிகிச்சை மூலம் மீட்கப்பட்டது. கடும் போராட்டத்திற்கு பின்னரே மருத்துவர்களால் அந்த குழந்தை உயிருடன் காப்பற்றப்பட்டது.

எனினும் அந்தக் குழந்தை கடந்த வியாழக்கிழமை (25) உயிரிழந்த நிலையில் தாய்க்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

ரபா நகரில் கடந்த வாரம் நடத்தப்பட்ட வான் தாக்குதில் கொல்லப்பட்ட 16 குழந்தைகளில் சப்ரீனும் இடம்பெற்றுள்ளது. குடியிருப்பு வளாகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அனைவரும் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலின்போது சப்ரீனின் தாய் ஏழரை மாத கர்ப்பிணியாக இருந்தார். இதன்போது அவரது கணவர் மற்றும் மூன்று வயது மகள் மலக்கும் கொல்லப்பட்டனர்.

# பௌத்த யாத்திரை தலமாக கந்தாராவை மாற்றத் திட்டம்



உலக பௌத்த மக்களின் புனித யாத்திரைக்கான சர்வதேச மையமாக கந்தாராவை மேம்படுத்துவதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு உத்தேச கந்தாரா வழித்தட சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. சிந்து சட்ட மன்ற உறுப்பினர் கலாநிதி ரமேஷ் குமார் வான்க்வானி இந்த சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

'பௌத்த மக்களின் ஒரு புனித யாத்திரைத் தலமாகவும், சர்வதேச சுற்றுலா மையமாகவும் கந்தாராவை மாற்ற இந்த சட்டமூலம் வழிவகுக்கும்' என்று குறிப்பிட்டுள்ள வான்க்வானி, பௌத்த மக்கள் செறிவாக வாழும் நாடுகளுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நட்புறவு மேலும் மேம்படவும் பௌத்த சமய, கலாசார சுற்றுலாத் துறை வளர்ச்சியடையவும் இது பெரிதும் உதவும் என்றும் கூறியுள்ளார்.

பௌத்த கலாசாரத்துடன் சம்பந்தப்பட்ட கந்தாரா நாகரிகத்தின் 90 வீதமான புனித சின்னங்களும் கலைப்பொருட்களும் கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் கந்தாராவில் காணப்படுகிறது.

இந்த சட்டமூலத்திற்கு பாகிஸ்தான் கைபர் பக்துன்க்வா மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 27ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.